

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

## மாசி - பங்குனி

மலர் 11 மார்ச் - 2022 இதழ் 3

பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| வண்டு ஸ்தோத்ரம்<br>பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 7 |
| நீதிக் கதைகள்<br>பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 12 |
| அனுக்கிரஹ பாஷணம்<br>பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 15 |
| Beyond Text Book | 18 |
| Uncovering the Story on the Stone | 21 |
| ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 2 | 22 |
| ப்ரபோத சிந்தமாணி | 23 |
| வள்ளலார் வழங்கிய அருட்பா | 24 |
| ருக் வேதத்தின் பெருமை | 28 |
| சூரியன் அளித்த சுக்ல யஜுர் வேதம் | 31 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 34 |
| பங்குனி மாத விசேஷ தினங்கள் | 39 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 40 |
| புராணக்கதை | 42 |
| மகாபாரத சுருக்கம் | 44 |
| ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் | 46 |


भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ N. சிவராமகிருஷ்ணன்
ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்
டாக்டர் G. சங்கரநாராயணன்








# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
பேராசிரியர் S. ஸ்ரீநிவாஸ சர்மா
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் ம.வே.பசுபதி
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jaiganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை

# प्रार्थना

**ஸதா மோஹாடவ்யாம் சரதி யுவதீனாம் குசகிரௌ**
**நடதி ஆசாஸாகாஸு அடதி ஜடிதி ஸ்வைரமபித:**
**கபாலின்! பிக்ஷோ மே ஹ்ருதயகபிம் அத்யந்தசபலம்**
**த்ருடம் பக்த்யா பத்வா ஸிவ பவததீனம் குரு விபோ** (20)

*ஹே கபாலி என் மனக்குரங்கு மோஹக் காட்டில் அலைகிறது, பெண்களின் மார்பு மலைகளில் நடனம் செய்கிறது. பலவிதமான ஆசைகளில் அலைகிறது. இந்த அத்யந்த சபலமான மனக் குரங்கை கட்டி உன் ஸ்வாதீனமாக்கி கொள்.*

**ப்ரலோபாத்யை: அர்தாஹரண பரதந்த்ரோ தனிக்ருஹே**
**ப்ரவேஸாத்யுக்த: ஸன்ப்ரமதி பஹுதா தஸ்கர பதே**
**இமம் சேதச்சோரம் கதமிஹ ஸஹே ஸங்கர விபோ**
**தவாதீனம் க்ருத்வா மயி நிரபராதே குரு க்ருபாம்** (22)

*ஹே சிவா திருடர்களின் தலைவா என் மனம் என்னும் திருடன் பிறருடைய பணத்தில் ஆசை வைத்து தனிகர்களின் இல்லங்களில் நுழைந்து தனத்தைத் திருட விழைகிறது. இந்தத் திருடனை நான் எப்படி பொறுப்பேன்? இதை உன் ஸ்வாதீனமாக்கி என்னை நிரபராதியாக்கு.*

**தவத் பாதாம்புஜம் அர்சயாமி பரமம் த்வாம் சிந்தயாம்யன்வஹம்**
**த்வாமீஸம் ஸரணம் வ்ரஜாமி வசஸா த்வாமேவ யாசே விபோ**
**வீக்ஷாம் மே திஸ சாக்ஷுஷீம் ஸகருணாம் தைவயைச்சிரம் ப்ரார்த்திதாம்**
**ஸம்போ லோககுரோ மதீய மனஸ: ஸௌக்யோபதேசம் குரு** (29)

**ஸ்ரீ சங்கரரின் சிவானந்த லஹரீ**

*ஹே சம்போ லோக குருவே ! உன் பாதாம்புஜத்தை அர்சிக்கின்றேன், உன்னையே தினம் சிந்திக்கின்றேன், உன்னையே சரணம்டைகிறேன். உன் கருணையான பார்வையால் என் மனதுக்கு சுகமான உபதேசம் செய்வாயாக.*

கலந்து நின்னடியாரோடு அன்று வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்றது இடர் பின் நாள்
உலர்ந்து போனேன் உடையானே உலவா இன்பம் சுடர் காண்பான்
அலந்து போனேன் அருள் செய்யாய் ஆர்வம் கூற அடியேற்கே

*ஹே பரமசிவனே உன் அடியார் ஸதசங்கத்தில் நான் திளைத்திருந்த காலம் போயிற்று. உன் ஜோதியில் கலக்க இன்று வாடிக் கிடக்கின்றேன். அருள் செய்வாயாக.*

அடியார் சிலர் அருள் பெற்றார் ஆர்வம் கூற நான் அவமே
முடை ஆர் பிணத்தின் முடிவு இன்றி முனிவால் அடியேன் மூக்கின்றேன்
கடியேனுடைய கடுவினையைக் களைந்து உன் கருணைக் கடல் பொங்க
உடையாய் அடியேன் உள்ளத்தே ஓவாது உருக அருளாயே

*ஹே சிவனே ! அடியார்கள் பலர் உன்னை நாடியதால் உன்னை அடைந்தனர். உடலைப் பேணி நான் வினையைப் பெருக்கினேன். அத்தகைய எனக்கு அருள் நாட்டம் தருக.*

தாரா அருள் ஒன்று இன்றியே தந்தாய் என்று உன் தமர் எல்லாம்
ஆரா நின்றார் அடியேனும் அயலார்போல் அயர்வேனோ
சீரார் அருளால் சிந்தனையைத் திருத்தி ஆண்ட சிவலோகா
பேரானந்தம் பேராமை வைக்க வேண்டும் பெருமானே

*உன் அன்பர்கள் பரிபூரணமான உன் அருளில் திளைக்கின்றனர். என்னை மட்டும் புறக்கணிக்கலாமா? என் சிந்தனையைத் திருத்தி என்னையும் உன் நிலைத்த அருளுக்கு ஆளாக்குக.*

# ஆசிரியர் பக்கம்

நீதிமன்றத்திற்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று நினைக்கும் நீதிதேடும் மக்களின் தேவைக்கேற்ப நீதி அளிக்கும் பாணியை மாற்றுவது இந்திய மயமாக்கல்''

தலைமை நீதிபதி ஸ்ரீ ரமணா

'' மனு, கௌடில்யர், யாக்யவல்கியர், நாரதர், ப்ருஹஸ்பதி, போன்ற பாரதச் சிந்தனையாளர்கள் உருவாக்கிய பண்டைய பாரத சட்ட நெறிமுறைகள் படிக்கவும் பின்பற்றவும் தகுதியானவை''. தலைமை நீதிபதி நசீர் ''மேற்கத்திய நீதிமுறை நமக்கு ஒவ்வாது'' ''மகாத்மா காந்தி'' நம் நீதியியல் மேற்கத்திய கருத்துகளில் ஒடுங்ககூடாது. நம் நீதி துறைக்கு வெளி நாட்டு ஊன்றுகோல் தேவையில்லை. எங்கிருந்து வந்தாலும் நல் சிந்தனையை ஏற்க வேண்டும் ஆனால் நமக்கென்று நீதியியல் தேவை'' நீதிபதி பகவதி. மேற்கூறிய கருத்துக்கள் மெத்தப்படித்த நுண்மாண் நுழைபுலம் கொண்ட நீதிபதிகளின் கருத்து. சுமார் ஐந்து கோடிக்கு மேல் தேங்கி இருக்கும் வழக்குகள் விரைவில் தீர்க்கப்பட வேண்டுமெனின் நீதித்துறை பாரதீயமாக்கப்படல் வேண்டும். கடந்த டிசம்பர் இதழில் யாக்யவல்கியரைப் பற்றி எழுதும்போது அவருடைய சிறந்த கருத்துக்களைக் கூறியுள்ளோம். மனு, கௌடில்யர், யாக்யவல்கியர் இம்மூவருடைய நூல்கள் privy council இல் ஆதாரமாக வைக்கப்பட்டுள்ளன.

நமக்குள்ள அரசியல் சட்டம் கூட பாரதீயமாக்கப்பட வேண்டும். எல்லா துறைகளிலும் நமது மாண்பு விளக்கப்பட வேண்டும். இதற்குத் தேவை நமது பாரம்பரிய சிந்தனைகளை விளக்கும் நமது புதிய கல்விமுறை. மாணவர்கள் அனைவருக்கும் லௌகிக கல்வி கற்பித்தாலும் அறம் சார்ந்த நமது கல்விமுறை பயிற்று வைக்கபட வேண்டும்.

இதற்கு ஒரு சான்று. ஸ்ரீ மார்கண்டேய கட்ஜு தலைமை நீதிபதியாக பணியாற்றியவர். அவர் தனது வழக்குகளை எப்படி மீமாம்ஸ சாஸ்த்ர சூத்ரங்கள் வாயிலாக தீர்த்து வைத்தார் என்று சொன்னபோது வியப்பாக இருந்தது. எப்படி நாம் நம் பொக்கிஷமான சாஸ்த்ரங்களை விட்டு விலகிப் போய்விட்டோம் என்று நினைக்கும் போது மனம் கனக்கிறது. அதற்குத் தேவை நம் கல்வி முறை.

வீட்டு வைத்யத்திலேயே சரியாகப் போகிற நோய்களுக்கு கார்பொரேட் மருத்துவ மனைகளை நாடுதல், சாதாரண க்ராம பஞ்சாயத்தில் முடிகிற வழக்கு சுப்ரீம் கோர்ட்வரை போதல் இவை நம் சிந்தனையை பீடித்திருக்கும் பிணி. இவ்விடத்தில் இரண்டு வழக்குகளைக் கூறுவோம். இரண்டும் விவாகரத்துத் தொடர்புடையவை. மணம் முடிந்து இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை.

அவஸ்யமாகவே இருந்தது விவாகரத்து. யாரும் நீதிமன்றத்தை நாடவில்லை. பரஸ்பர ஒப்புதலுடன் பெரியோர்கள் நாட்டாண்மையால் ஆவணங்களுடன் ஒரே நாளில் விவாகம் ரத்து ஆகியது. இழப்பீடும் தரப்பட்டது. இது நம் நாட்டு நீதிமுறை. மேற்கத்திய முறையில் இவ்வளவு விரைவாக வழக்கு முடிக்கப்படுமா? எனவே தேவை நம் பாரதீய கல்விமுறை. இம்முறையில் வழக்குகள் நடந்தால் மக்களுக்கு விடிவு காலம் வரும். உண்மையான ஸ்வராஜ்யம் மேற்கத்திய கலாசாரத்தை கண்மூடித் தனமாக பின்பற்றாமல் நமது பாரம்பர்யத்தில் கூறியுள்ள விஷயங்களைப் பின்பற்றுவதுதான் என்று மகா பெரியவா கூறியபடி இப்போதாவது நல்ல பாதையில் போக தோன்றியதே என்று மகிழ்ச்சி அடையலாம். ஸ்வராஜ்யம் தான் வேண்டும் என்று கூறிய பெரியவாளைப் போற்றுவோம் என்று கூறி இவ்விதழை அவரது பொற்பாதத்தில் சமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர

## வருந்துகிறோம்

தேசிய சிந்தனை கொண்டவரும் தமிழ் இலக்கியவாதியுமான வித்வான் ஸ்ரீ மா.வே பசுபதி அவர்கள் இறைவனடி சேர்ந்தார் என்பது ஒரு துக்க சம்பவம். ப்ரதீபத்தில் சுமார் இரண்டு ஆண்டுகள் ''தமிழ் இலக்கியங்களில் வேதம், வேதியர், வேள்வி'' என்னும் தலைப்பில் தொடர் கட்டுரைகள் எழுதி தமிழ் கூறும் நல்லுலகம் பாரதீய கலாசாரத்துடன் சேர்ந்தது, மொழியினால் பிரிந்தாலும் உணர்வினால் ஒன்றானது என்று சான்றுகளுடன் சாதித்தவர். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய பகவானைப் ப்ரார்த்திக்கிறோம்.

# வண்டு ஸ்தோத்ரம்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## ஸம்ஸாரம் நீக்கி ஸதாநந்தம் அருளும் அடி



**பரிமள பரிபோக ஸச்சிதாநந்தே** என்று ஆசார்யாள் சொல்கிறார். பரிமளம் என்றால் ஸுகந்தம். பரிமளரங்கநாதர் என்றே சொல்வதுண்டு.

'பரிபோகம்'- ஸுகித்து ஸுகித்து அநுபவிக்கக் கூடியது. எத்தனை ருசித்தாலும் திகட்டாத ஆனந்தம் தருவது. எப்படிப்பட்ட ஆனந்தம்? ஸாதாரண விருந்து, நிலாச் சாப்பாடு சாப்பிடுகிற ஆனந்தமா? இல்லை. (தைத்திரீய) உபநிஷத்தில் ஆனந்தத்துக்கு மேல் ஆனந்தம் என்று ஒவ்வொரு தினுஸான ஆனந்தத்தையும் அடுக்கிக் கொண்டே போய் அதன் உச்சியாகச் சொல்லியிருக்கிற ப்ரம்மானந்தத்தையே தருவது பகவானின் பாதம்.

ப்ரம்மத்தை ஸத் - சித் - ஆனந்தம் என்பார்கள். அது தான் அழியாத உண்மைப் பொருளான ஸத். அதுவே அறியப்படுவதாகவும் அறிகிறவனாகவும் கூட இருக்கிற அறிவு: சித். அந்த நிலையில் தனக்கு

வேறாக எதுவுமே இல்லாமலிருப்பது தான் சாச்வத ஆனந்தம்: ஸச்சிதானந்தம். இந்த ஸச்சிதானந்தத்தையே தேனாகப் பொழிந்து கொண்டும், ஸுகந்தமாக மணம் வீசிக் கொண்டும் இருப்பது ஸ்ரீ பதியின் பாதாரவிந்தம் :

**திவ்யது நீ மகரந்தே**
**பரிமள பரிபோக ஸச்சிதானந்தே**
**ஸ்ரீபதி பதாரவிந்தே**

அது ஸச்சிதானந்தத்தைக் கொடுக்க வேண்டும் என்றால் அதற்கு முன்னால் இந்த ஸம்ஸார பயத்தைக் கெடுக்க வேண்டும்.

**பவ பய கேத - ச்சிதே வந்தே**

முதல் ச்லோகத்தில் **தாரய ஸம்ஸார, ஸாகரத:** என்று வேண்டிக்கொண்டார் அல்லவா? அதில் வந்த ஸம்ஸாரமே இதில் ’பவ பய’ என்பதில் வரும் பவம்.

‘ஸம்ஸாரம்’ என்பதை ‘பவம்’, ‘பவம்’ என்றும் சொல்வார்கள். ‘பவ்வினை’ ‘பவஸாகரம்’ என்றெல்லாம் பாட்டுக்களில் வரும். பவம் என்றால் உண்டாவது. சரவணத்தில் உண்டானவன் சரவணபவன். உத்பவம் என்கிறோமே, அது ‘பவ’த்தின் அடியாகப் பிறந்த வார்த்தைதான். ஸம்ஸாரம் என்றால் நிலையில்லாமல் ஓடிக் கொண்டேயிருப்பது. அது பவ’மானது. அதாவது அது ‘உண்டான வஸ்து’. உண்டானது என்பதாலேயே இது அநாதியாக, ஸ்வயம்புவாக இருப்பதல்ல என்றும், இன்னொன்றிலிருந்து பிறந்ததே என்றும் தெரிந்து விடுகிறது. இதற்கு ஆதியும், பிறப்பும் இருப்பதாலேயே அந்தமும், அழிவும் இருந்து தான் ஆக வேண்டும். இது எதனிடமிருந்து உண்டாயிற்றோ பரமாத்ம தத்வமே ஆதியந்தமற்ற நித்யவஸ்து.

பவன் என்று பரமேச்வரனுக்கும் பெயருண்டு. பவன், சர்வன், ருத்ரன், பசுபதி, உக்ரன் மஹாதேவன், பீமன், ஈசானன் என்ற எட்டுப் பெயர்களும் பரமசிவனுக்கு ரொம்பவும் விசேஷமானவை. பவனின் பத்னிதான் ‘பவானி’, சர்வனின் பத்னி ‘சர்வாணி’; ருத்ர பத்னி ருத்ராணி; இப்படியே ஈசானன்-ஈசானி எல்லாவற்றையும் உண்டாக்குவதால் அவன் ‘பவன்’. அழிப்பதால் ‘சர்வன்’. ஆக்குகிறவனே தான் அழிப்பவனும்! ‘பவ’ என்ற வார்த்தையை வைத்து மூகர் (‘பஞ்ச சதீ’யில்) வேடிக்கையாகச் சொல்வார்: ‘அம்மா! உன்னுடைய பாதம் பவனுக்கு (சிவனுக்கு) ரொம்பவும் ஆனந்தத்தை உண்டாக்கிக் கொண்டே இன்னொரு பக்கத்தில் பவத்தை (ஸம்ஸாரத்தை) அழிக்கிறதே என்று சொல்வார். அம்பாள் பாதத்தை மூகர் சொன்னார். அவளுடைய புருஷ ஸ்வரூபமேயான

மஹாவிஷ்ணுவின் பாதத்தைச் சொல்லும்போது ஆசார்யாள், ‘ஸம்ஸார பயம் என்ற துன்பத்தை வெட்டி எரிகிறது பகவானின் பாதம் என்கிறார்.

**பவபய கேத-ச்சிதே**

ஸம்ஸாரமானது பயத்தை மட்டுமில்லாமல் வேதனை, துக்கம், ஆயாஸம் எல்லாமும் தருகிறது. இவற்றைத்தான் ‘கேதம்’ என்று சொல்லியிருக்கிறது. ஸம்ஸார பயத்தையும், துக்கத்தையும் சிதைத்து அழிக்கும் திருவடிகளை நமஸ்காரம் பண்ணுகிறேன் என்கிறார்,

**பவபய கேத - ச்சிதே வந்தே**

## பக்தி - த்வைதம் கூறும் அத்வைத ஆசார்யர்

அடுத்த ச்லோகத்தில் – அதாவது ‘ஷட்ப தீ’ யின் மூன்றாவது ச்லோகத்தில்–– ஒரு பெரிய தத்வத்தைச் சொல்கிறார் ஸ்ரீ ஆசார்யாள் .

**ஸத்யபி பேதாபகமே**
**நாத தவாஹம் ந மாமகீநஸ்த்வம்**
**ஸாமுத்ரோ ஹி தரங்க:**
**க்வசந ஸமுத்ரோ ந தாரங்க:**

‘பேத அபகமே’ என்பது சேர்ந்து வரும்போது ‘பேதா பகமே’ என்றாகிறது. ‘அபகமம்’ என்றால் போய்விடுவது, ‘நீங்குவது’ என்று அர்த்தம். கமம், கமனம் என்றால் வருவது, சேர்வது. இதற்கு எதிர்ச் சொல் அபகமம். ‘பேத அபகமே’ என்றால் பேதம் நீங்கிவிட்ட நிலையிலே என்று அர்த்தம்.

என்ன பேதம்? இப்போது பரமாத்மா என்று ஒன்று இருக்கிறது, அதற்கு வேறாக ஜீவாத்மா என்று இன்னொன்று இருக்கிறது என்றுதானே நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம்? இப்படி பரமாத்மாவும் ஜீவாத்மாவும் வேறு வேறு என்று. அதாவது அவை பேதமானவை என்று நினைத்துக் கொண்டிருப்பதால்தான் ஸம்ஸார நாடகமே நடக்கிறது. இரண்டும் வேறு இல்லை, ஒன்றுதான், கொஞ்சம்கூட பேதமே இல்லை என்று சொல்வது தான் அத்வைதம். ஆசார்யாள் நிலை நாட்டின ஸித்தாந்தம் அது தான். ‘ஜீவ ப்ரஹ்ம அபேத யோகம்’ என்றே அதைச் சொல்வார்கள்,

இந்த பேதம் போன நிலையைத்தான் ‘பேதாபகமே’ என்றார், அது தான் ஸத்யமான, எக்காலும் மாறாத ஆனந்தமான, மோக்ஷம் எனப்படுகிற நிலை. இது தான் பரம ஸத்யம் என்றாலும் கூட, ......

## ஸத்யபி

‘அபி’ என்றால் என்றாலும் கூட’. இப்படியொரு clause போட்டுவிட்டால், இதற்கு மாறாக, வித்யாஸமாக இன்னோர் அபிப்ராயம் வரப்போகிறது என்று அர்த்தம். ‘பகவானே! நீயும் நானும் வேறாக இருக்கிற பேதம் போய்விட்டாலுங்கூட...’ என்று ஆரம்பிக்கிறார்.

**‘அத்வைதப்ரதிஷ்டாபன ஆசார்ய’** என்றே ஸ்தோத்ரம் செய்யப்படுகிற பகவத்பாதாள் அபேத அத்வைதத்துக்குத் துளிக்கூட மாறாக, வித்யாஸமாக இன்னொன்றைச் சொல்லக் கூடாதே, இங்கே என்ன இப்படி இருந்தாலுங்கூட என்று ‘அபி’ போடுகிறார் என்று பார்த்தால்:

இங்கே அவர் பக்தராகப் பேசுகிறார். ஞானியாக அத்வைதத்தைச் சொன்னார். ஞான மார்க்கத்தில் போகக் கூடியவர்களுக்கு எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படித் தமது பாஷ்யங்களிலும், மற்ற ஞான க்ரந்தங்களிலும் சொன்னார். தீர்மானமாக, ’ஜீவாத்மா பரமாத்மா என்று இரண்டில்லை. ப்ரஹ்மம் ஒன்றுதான் ஸத்யம். ஜீவனும் அந்த ப்ரஹ்மம் தான். இந்த லோகமெல்லாம் வெறும் மாயைதான்’ என்று திரும்பத் திரும்பச் சொன்னார்.

ஆனால் இப்படி அவர் சொன்னார் என்பதாலேயே, சொல்கிறவர், அதைக் கேட்க வேண்டியவர்கள் என்றெல்லாம் ஏதோ பேதமிருக்கிற மாதிரி இருக்கிறது. எல்லாம் ப்ரஹ்மம், லோகம், மாயை என்று விட்டால் யாருக்கு யார், என்னத்தை உபதேசிப்பது?

சங்கர பகவத் பாதர்களுக்குத் தெரியாதது எதுவுமே இல்லை. கார்யமில்லாமல் எல்லாம் தானாக அடங்கிப்போன நிலையில் அத்வைதம் ஸித்திக்கிறது; அங்கே ஜீவ ப்ரஹ்ம பேதமே இல்லை. ‘பேத அபகமம்’ ஏற்படுகிறது. ஆனால், அந்த ப்ரஹ்மமேதான் மாயா சக்தியால் தன்னை இத்தனை ஜீவ ஜந்துக்களைப் போலவும், ஜகத்தைப் போலவும் காட்டி, இந்தக் கார்ய ப்ரபஞ்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கார்ய ப்ரபஞ்சம் இறுதியான ஸத்யம் இல்லை. அதற்கு ஆதாரம் கார்யமில்லாத ப்ரஹ்மம் தான். அந்த ப்ரஹ்மத்தோடு ஒன்றிவிடுவது தான் நிரந்தர ஸத்யமான நிலை. எல்லாம் ஸரிதான். ஆனால் நிரந்தர ஸத்யமாக இல்லாவிட்டாலும், தாற்காலிகமாக இந்த லோகத்தை நாம் நிஜம் என்று நினைக்கிறவரையில் அதுவும் ரொம்ப நிஜம் மாதிரித்தானே இருந்துகொண்டிருக்கிறது?

பரம ஸத்யத்திலே கரைந்து ஒரு ஞானி நிர்விகல்ப ஸமாதியில் ப்ரஹ்மமாக இருந்தாலும் கூட, அந்த ப்ரஹ்மமே இந்தக் கார்ய ப்ரபஞ்சத்தை நடத்துவதற்காக எடுத்துக்கொண்டிருக்கிற ஈச்வர நிலையிலே வந்து அந்த ஞானியையும், 'அப்பா, உனக்கு ஸாரத்தில் எல்லாம் ஒன்றாகத் தெரிந்தாலும், வ்யவஹாரத்தில் வேறுவேறு மாதிரி இருப்பதையும் நீ கொஞ்சம் கவனிக்கிற மாதிரி கவனித்து இந்த லோகத்துக்கு நல்லது பண்ணு, இதற்கு உபதேசம் பண்ணு'' என்று ஞானியையும், தன்னலமே இல்லாத பரோபகார கர்மாவில் தள்ளிக்கொண்டு தானே இருக்கிறது? இந்த நிலையில் இருந்து கொண்டுதானே அத்வைத ஸ்வரூபமான ஆசார்யாளும், உபதேசத்தைக் கேட்பதற்காகத் தமக்கு அந்யமாக இன்னொருத்தர் இருப்பது போலத் தோன்றும் வ்யவஹார தசையை ஒப்புக்கொண்ட மாதிரி நிறைய எழுதியும், பேசியும், வாதம் செய்தும், தேசமெல்லாம் சுற்றியும் உபதேசம் பண்ணினார்? அந்த நிலையில் ஸகல கார்யத்துக்கும் ஆதார சக்தியாக இருக்கப்பட்ட ஈச்வரனை பக்தி பண்ணினார். கார்யமில்லாத ப்ரஹ்மத்தோடு ஸாக்ஷாத் ப்ரஹ்மமாகவே அத்வைதமாக இருக்கிறவர், கார்யம் என்று வந்த போது, ஈச்வரன் என்ற மஹா சக்தியின் லவலேசம்தான் தாம் என்று அடங்கியிருந்து காட்டினார். கார்யமற்ற நிலையில் ஜீவனைத் தானாகவே ஆக்கிக் கொள்கிறவன் கார்ய லோகத்தில் தான் மட்டுமே ஸர்வ சக்தனாக இருந்துகொண்டு அந்த சக்தியில் துளித் துளிதான் ஜீவர்கள் மூலம் வெளிப்படுத்துகிறான். இப்படித் தான் ஆசார்யாள் அபிப்ராயப்பட்டிருக்கிறார்.

அதனால் தான் ப்ரஹ்மத்தோடு ப்ரஹ்மமாக இருந்தவரே, கார்யம் என்று வருகிறபோது (உள்ளூர பகவத் பாதாளுக்குத் தாம் கார்யமில்லாத வஸ்து என்ற அநுபவம் ஸதா இருந்து கொண்டிருந்தாலும் இப்படி ஒரு வேஷம் போட்டு நடிக்கிறபோது) ஈச்வரனிடம் ரொம்பவும் அடங்கி, பரம விநயமாக இருந்து காண்பித்தார். இந்த angle-லிருந்து (கோணத்திலிருந்து) தான் 'ஷட்பதீ'யில் மூன்றாவது ச்லோகத்தைப் பண்ணியிருக்கிறார்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

# இந்து சமயத்தின் பெருமை



நம்முடைய நாடு புனிதமான நாடு. இந்த நாட்டிலே எத்தனையோ மாபெரும் மன்னர்கள் தோன்றினார்கள். எத்தனையோ மகான்களும், ஞானிகளும், மேதைகளும் தோன்றினார்கள்.

அவர்கள் எல்லாம் நம்முடைய இந்து சமயத்தை வளர்ப்பதற்காக மாபெரும் கோயில்களைக் கட்டியிருக்கிறார்கள்.

உலகத்திலேயே எங்கும் இல்லாத அதிசயங்களையெல்லாம் திருநெல்வேலி மாவட்டத்திலே உள்ள கோயில்களிலே காணலாம்.

நெல்லையப்பர், சுசீந்திரம் உட்பட பல கோயில்களில் எங்கும் காணமுடியாத அபூர்வங்களை அமைத்து, நமக்கு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்.

அந்தக் கோயில்கள் மூலமாக கலைகளையும், அந்தக் கலைகள் மூலமாக சமயத்தையும் கட்டிக் காத்து வந்திருக்கிறார்கள்.

நம்முடைய இந்து சமயம்- யாராலும் அழிக்க முடியாதது, ஏனென்றால் அது ஒருவராலும் தோற்றுவிக்கப்படவில்லை. தோன்றியிருந்தால்தான் அது அழியக்கூடியது ஆகும். ஆனால் இதுவோ சுயம்புவான சமயம்.

பிறப்பவர்கள் தான் இறப்பார்கள். பிறவாதவர்கள் எப்படி இறக்க முடியும்? பிறக்காதவன் இறைவன். அதுபோலவே நம்முடைய சமயமும் பிறக்காத தனித்தன்மை உள்ளதாக இருக்கிறது.

இறைவன் எப்போதும் இருப்பதுபோல் நம் இந்து சமயமும் எப்போதும் இருந்து

கொண்டு இருக்கும். சூரியன் ஒருபோதும் உதயமாவது இல்லை. அஸ்தமிப்பதும் இல்லை. ஒரே நிலையில்தான் இருந்து கொண்டு இருக்கிறது.

நம் நாட்டில் சூரியன் தெரியும்போது இன்னொரு நாட்டில் மறைந்திருப்பான். நம் நாட்டில் மறைந்திருக்கும் பொழுது இன்னொரு நாட்டில் உதித்துக் கொண்டு இருப்பான். ஆனால் ஒருபோதும் சூரியன் மறைவது இல்லை. உலகம் முழுவதும் சூரியன் ஒளிபடாத இடமே கிடையாது. சூரியனுக்கு உறக்கமே கிடையாது. இருபத்து நான்கு மணி நேரமும் தன்னுடைய கடமையை விடாமல் செய்து கொண்டே இருக்கிறான்.

பகலில் சூரியஒளி இருக்கும்போது கூட, அதாவது உச்சிவெயில் நேரத்தில்கூட மேகமூட்டம் இருக்கும் போது சூரிய ஒளி தெரியாமல் போய்விடுகிறது.

ஒரு காற்று வரும். மேகம் கூடும்; இன்னொரு காற்று வரும்போது மேகம் கலையும். மேகத்தினால் சூரியன் மறைக்கப்படுகிறதே ஒழிய சூரியன் ஒரு போதும் மறைவது கிடையாது.

மேகம் வரும். பிறகு போகும் அது போலத் தான் நம்முடைய சமயமும் சிற்சில நேரங்களில் மறைவது போலத் தோன்றினாலும் அது மறைவது இல்லை. அதை யாராலும் மறையச் செய்யவோ, அழியச் செய்யவோ முடியாது.

அப்படிப்பட்ட இந்து சமயத்தின் பெருமைகளை உணர்ந்த ஆன்றோர்களும் பெரியோர்களும், புத்திமான்களும் நம்முடைய இந்துச் சமயத்தை ஈடுபாட்டுடன் கட்டிக்காத்து வந்திருக்கிறார்கள்.

படித்தவர்கள், விஞ்ஞானிகள், எல்லோருமே ஆராய்ச்சி செய்து, சிந்தித்து இந்து சமயத்திலே இணைந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நம்முடைய தேசத்திலோ, படிக்காத பாமர ஜனங்களுக்கு- அவர்களது உணவு, வீடு, பள்ளிக்கூடம், தொழில், மருத்துவமனை ஆகிய அடிப்படைத் தேவைகளைக் கொடுத்து அவர்களை மதமாற்றம் செய்ய சிலர் முயற்ச்சிக்கிறார்கள்.

ஜாதியின் பெயரைச் சொல்லி அவர்களைப் பிரிவுபடுத்தி தங்கள் பக்கமாக இழுத்து மதமாற்றம் செய்து விடுகிறார்கள்.

வெளிநாட்டில் உள்ள படித்தவர்கள், புத்திசாலிகள், விஞ்ஞானிகள், இந்தியாவின் பெருமைகளை உணர்ந்து, இந்து சமயத்தின் அருமைகளை உணர்ந்து இன்றைக்கும் தாபத்தோடு தேடித் தேடி வந்து கொண்டு இருக்கிறார்கள்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் சர்ச்சுகளுக்கு யாரும் போவதில்லை. ஏதோ வயதானவர்கள் மட்டும் போகிறார்கள். மற்றவர்கள் எல்லாம் இந்து சமயத்தில் ஈடுபாடு கொண்டு நெருங்கி வருகிறார்கள். அந்த ஊரில் உள்ள படித்தவர்களும், அறிஞர்களும் இந்து மதத்தின் தத்துவத்தை ஒப்புக்கொண்டு வருகிறார்கள். ஆனால் நம் ஊரில் உள்ள பாமரர்களை, அரசியல்வாதிகள் ஓட்டுக்காக மாற்றுவதைப்போல மாற்று மதத்தவர் மதம்மாற்றி வருகிறார்கள்.

அதனால்தான் நம் பாமர மக்கள் ஏமாந்து போய் கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலை இருக்கக்கூடாது என்பதை நினைவுபடுத்துவதற்குத்தான் இதுபோன்ற இந்து சமய மாநாடுகளை நடத்துமாறு கூறினோம். பல ஊர்களிலே பெரிய அளவிலே மாபெரும் மாநாடுகளை நடத்தச் சொன்னோம்; நடத்தினார்கள்.

இந்த மாநாட்டுக்கு நேரம் குறுகலாக இருந்ததால் சிறிய அளவில் நடத்தச் சொன்னோம். அதனால் சிறியதாக நடத்துகிறார்கள்.

எத்தனையோ ஊர்களுக்குச் சென்று வந்தோம். எத்தனையோ சிறிய-பெரிய கூட்டமைப்புகளைப் பார்த்தோம். அவர்கள் எல்லோருக்குமே ஒட்டு மொத்தமாக ‘இந்து’ என்ற உணர்வு வரவேண்டும் என்று ஆசைப்பட்டோம்.

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு


ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும் சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன், ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# அனுக்ரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## *06.02.2022 அன்று தியாகராஜா மண்டபம் திருப்பதி*



ஐம்பது நாட்கள் முன்பு, கார்த்திகை மாசம், வெங்கடேச சுவாமி தர்சனத்திற்காக வந்தோம். பிறகு தனுர் மாசம் பூஜைக்கு இங்கே ஒரு வாரம் இருக்கலாம் என்று வந்து, இங்கேயே இருந்து விட்டோம். நடுவில், டிசம்பர் முப்பதாம் தேதி காஞ்சி சுவாமிகளின் ஆராதனை அன்று இங்கிருந்தே சென்று வந்தோம். வசந்த பஞ்சமி மற்றும் ரத சப்தமி முடிந்த பின், காஞ்சி செல்கின்றோம்.

இது வரை விஜயவாடா, விசாகப்பட்டணம், ஹைதராபாத் ஆகிய இடங்களுக்கு பூஜையுடன் செல்லும் போதெல்லாம் முதல் யாத்ரையாக இங்கு (திருப்பதி) வெங்கடாசல ஐயர் பீமாஸ் அவர்கள் மூலம் இந்த தியாகராஜ சுவாமி மண்டபத்தில் ஏற்பாடு செய்யச் சொல்லி சந்திரமௌலீஸ்வர்ர பூஜை செய்யும் வழக்கம்.

இங்கு சுமார் ஐநூறு பேர் உட்கார முடியும். இங்கே நெய்வேத்தியம் கூட தயார் செய்ய வசதி உண்டு. பரிவாரத்துடன் இங்கே இருக்க முடியும். இங்கே திருப்பதியில் யாத்திரை ஸ்தலமாக அனைத்தும் உள்ளது. இங்கே அநேக ஹோமங்களும் அற்புதமாக நடந்தது. பூஜைகள் நடந்தது. இங்கே இரண்டு வருஷம் முன்பு வந்த போது சாம வேதம் சண்முக சர்மா அவர்களின் பிரவசனம் நடைபெற்றது. மூகபஞ்சசதி, தேவி மஹாத்மியம் நிகழ்ச்சிக்கும் இங்கு வந்தோம்.

இப்பொழுது இந்த கட்டிடம் பார்க்கும் போது, சென்னை நகரத்தில் இருக்கும் மண்டபம் போல் உள்ளது. நகரமும் வளர்ந்து விட்டது. மக்களுக்கு சத் சங்கத்திற்கும், சௌகரியத்திற்கும், சங்கீத வகுப்பு, சங்கீத கச்சேரி செய்வதற்கும், உபன்யாசத்திற்கும் பயன்படும். அந்தக் காலத்தில் பட்டன பிரவேசம் என்று செய்தார்கள். மகா ஸ்வாமிகள், புதுப்பெரியவா வருகிறார்கள் என்றால் பல்லக்கு மூலம் பட்டணப் பிரவேசம் செய்தார்கள்.

இந்த மாதிரி நகரத்தில், தர்மப் பிரச்சாரம் முக்கியம். ஒவ்வொருவரும் புது உத்தியோகம், புது படிப்பு படித்தல், மற்றும் திருப்பதி விஞ்ஞான ரீதியாக பிரசித்தி பெற்று வருகிறது. திருமலை திவ்ய க்ஷேத்திரமாக உள்ளது. கீழ் திருப்பதியில் IIT முதல் அனைத்தும் உள்ளன. பாலிடெக்னிக் முதல் IIT, management, Agriculture, ஆயுர்வேதம், மியூசிக் வரை அனைத்தும் உள்ளன. வித்யா நகரமாக உள்ளது. பெரிய நகரமாக ஆகியுள்ளது. வியாபாரம் பெருகியுள்ளது.

இந்த மாதிரி நகரம் பெரிதாகும் போது தர்மம், கலாச்சாரம் பற்றி சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. ஒரு பத்து மனிதர்கள் சேர்ந்து நன்றாக சிந்திக்க ஒரு சங்கம் இருக்க வேண்டும். ரோட்டரி கிளப், lions கிளப் எல்லாம் உள்ளன. சமாஜ சேவை செய்ய வேண்டும். நீங்கள் உற்சாகமாக சேர்ந்து செலவு செய்து, இந்த தியாகராஜர் கோவில், மண்டபம் கட்டியுள்ளீர்கள். இது முழுமையாக நன்றாக பூர்த்தி அடைய வேண்டும். திருப்பதியில் புராதனமாக உள்ளது இது.

தேசத்திற்கு விஞ்ஞானம் அவசியம். மனிதத்துவம் வளர வேண்டும். அதற்கு மனிதர்களின் மத்தியில் மானதத்துவம் பெருக வேண்டும். அது வளர, சங்கீதம், சத்சங்கம், ஹோமம், பிரவசனம் தேவை. அதில் மனது ஸ்ரத்தையுடன் இருக்க வேண்டும். இந்த மண்டபம் நகரின் மத்தியில் உள்ளது. அனைவருக்கும் சௌகரியமாக உள்ளது. சென்னையில் உள்ள சபை போல் இங்கு உள்ளது. விஜயவாடாவில் இரண்டு

வருடம் முன் ஒரு சபை செய்தோம். South Zone Cultural சென்டர் என்று தஞ்சாவூரில் ராஜீவ் காந்தி அவர்கள் ஆரம்பம் செய்தார்கள். அதன் மூலம் அறுபது கச்சேரி காஞ்சியில் ஏற்பாடு செய்தார்கள். அத்திவரதர் வைபவத்தில் நாற்பத்தி ஐந்து கச்சேரிகள் ஏற்பாடு செய்தார்கள். சென்னை மியூசிக் அகாடமியில் செய்கிறார்கள். வட சென்னையில் கூட கச்சேரி அனைத்தும் ஏற்பாடு செய்கிறார்கள். சென்னையில் செய்வது போல், இங்கேயும் நன்றாக செய்ய வேண்டும் என்ற நிர்ணயம் செய்து, இதுவரை உள்ள கமிட்டி உறுப்பினர்கள் காப்பாற்றி வந்து உள்ளார்கள். அதை இங்கு சொல்ல வேண்டும். இல்லையென்றால், இந்த இடம் ஒரு குடியிருப்பாக ஆகி இருக்கும். டிரஸ்ட்டிகள் ஆக இருப்பது கூட ஒரு நல்ல விஷயம். எப்படி நன்கொடை முக்கியமோ, அது போல் பராமரிப்பதும் முக்கியம்.

தானம் தந்தால் சொர்க்கம் கிடைக்கிறது. பராமரித்தால், பகவானின் பாதம் அருகில் செல்ல முடியும். இதை யாரும் ஆக்கிரமிப்பு செய்யாமல் ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்ள வேண்டும். இது சாமானியம் கிடையாது. இக்காலத்தில் இதை காப்பாற்றுவது கடினம். ஒற்றுமையாக இருந்தால் தான் பாதுகாக்க முடியும்.

இங்குள்ள கமிட்டி உறுப்பினர்கள் இந்த இடத்தை நன்கு கட்டியுள்ளார்கள். பிரவசனம், சங்கீதம், நாடகம், நாட்டியம், சத்சங்கம் நடந்திட வசதியுடன், நாட்டிய கலைஞர்கள் வந்தால் தங்கும் வசதி, மற்றும் நூலகம் அனைத்தும் இங்கு உள்ளது. இந்தக் கமிட்டியின் உத்தேசம் நன்றாக உள்ளது. இந்தக் கட்டிடம் நன்றாக பூர்த்தி அடைந்து, நாத உபாசனைக்கு, தியாகராஜ ஸ்வாமிகள் கூறியது போல், வெங்கடேச சுவாமி மற்றும் தாயாரின் அருளால் நன்றாக வளர வேண்டும்.

**ஹர ஹர சங்கர, ஜெய ஜெய சங்கர**

# BEYOND TEXT BOOKS



For DR. Nagaswamy history isn't an isolated account of the past, something that interests only the academicians. History to him is both personal and social. "Atleast that's how we must look at it. Interest in history comes only when people learn to associate it with their personal lives, he explains. The small piece of coins he holds in his hand, which is part of a larger collection belonging to the Vijayanagar Empire, demonstrates the association he talks.

The 74-year-old former director of Tamil Nadu State Archaeological Department would argue before any skeptics that only with the true understanding of history a person could identify himself with his culture and learn to respect other cultures. He devotes his freetime trying to inculcate this understanding by showing them the pictures of South Indian monuments and giving precise details of their significance.

Inspiring children to learn about their age old culture is something he has been doing from the days of his directorship. The small booklets with pictures and details of monuments which he prepared and distributed to school children 20 years ago, were not only popular among school goers, but also won the appreciation of UNESCO officials. Taking children to the monument close to their locality and involving them in a clean up activity is also a method Dr. Nagaswamy adopts to create interest.

Interest in history came to him when he first became the curator of Madras Museum, the oldest in the country. In 1959 the Amaravathi statues lying in store at the museum triggered his imagination and made him study every aspect of history and archaeology in detail. "Finding out the date of an artefact would double the excitement of an archaeologist, because we are in the unique position of putting an object in the right context.

Dr. Nagaswamy says

In his case, archaeology isn't just a tool for self gratification. The knowledge and information he possessed about South Indian bronze statues made him an expert witness in a case well – known as Padhur Nataraja statue case.

The artefact in question vanished without a trace, until it was found in the hands of an individual in London a few years ago. Under the auspicious of the Union Government. Tamil Nadu filed a case in London High Court to claim the statue. On the verge of losing the case the government decided to seek the expertise of Dr. Nagaswamy who decisively turned it in favour.

I presented crucial information to prove the statue was stolen and it rightfully belongs to the country which won the case for us, "Dr. Nagaswamy recalls. He also represented the Indian Government as their advisor, to work with the UNESCO's project on Bruhadeeshwara temple in Thanjavur."

Studies about Indian influence on foreign countries had also taken him to Malaysia, Thailand, and most interesting of them all, Cambodia whose history was inextricably linked with India till the 14th Century.

Dr. Nagaswamy gives many details personally gathered from his epigraphic studies. "Inscriptions there show Cambodia was called Cambodia Desam and most of its architecture was based on ours, he observes. He said the geographical proximity between India and Cambodia enabled exchange of people and culture.

Promoting cultural exchanges by learning foreign languages would reveal more about the contacts that existed between India and other South East Asian nations. Dr. Nagaswamy considers unfortunate the fact that little initiative has been taken by the government to process such activities:

"It will also give Indians a chance to tell the world the significant contribution made by us in the development of other cultures. Of course. such studies would be extensive and would go on for a long time."

He also believes history has to be, taken out of classrooms and taught in such a way that it prompts children to keep learning, even when they choose to pursue different careers. It would pass on knowledge about our culture to future generation." he says.

In recent years, he has been visiting various countries addressing seminars and offering advice on archaeology related matters to the governments. His ability to passionately express his feelings for artefacts is noted by scholars of Indology.

A collector of coins and artefacts, Dr. Nagaswamy also has thousands of books, audio and video material on Indian arts for reference by research scholars.

**L SUBRAMANI**

## ஸ்கந்த புராணம் கூறும் ஸர்வ தீர்த்த அபிஷேகம்

காம: க்ரோதச்ச லோபச்ச மோஹோ மத்யமத்தய :
மாயா மாத்ஸர்ய பைசுன்யம் அவிவேகோ அவிசாரணா
அந்தகாரோ ய்த்ருச்சா ச சாபல்யம் லோலதா ந்ருப
அத்யாயஸோஅபி அனாயஸ: ப்ரமாதோ த்ரோஹஸாஹஸம்
ஆலஸ்யம் தீர்கஸூத்ரத்வம் பரதாரோபஸேவனம்
அத்யாஹாரோ அனாஹார: சோகசௌர்யம் ந்ருபோத்தம
ஏதான் தோஷான் க்ருஹே நித்யம் வர்ஜயன் யதி வர்த்தே
ஸ நரோ மண்டனம் பூமேர்தேசஸ்ய நகரஸ்ய ச
ஸ்ரீமான் வித்வான் குலீனோ அஸௌ ஸ ஏவ புருஷோத்தம
ஸர்வதீர்த்தாபிஷேகச்ச நித்யம் தஸ்ய ப்ரஜாயதே ॥

## விலக்க வேண்டிய தோஷங்கள்

1. காமம், 2. க்ரோதம், 3. லோபம், 4. மோஹம், 5. மத்யபானம், 6. கர்வம், 7. மூடத்தனம், 8. சபலம், 9. பொறாமை, 10. அதிக ஆயாஸம், 11. அனாயஸம், 12. மறதி, 13. ஜடத்வம், 14. த்ரோஹம், 15. சோம்பேறித்தனம், 16. தள்ளிப்போடுதல். 17. பிறன் மனைவியை நாடல். 18. குறைவாக உண்ணல், 19. அதிகமாக உண்ணல், 20. சோகம், 21. திருடல் இவைகளை விலக்கும் நரன் பூமிக்கு அணியாவான். அவனே ஸ்ரீமான் வித்வான், குலீனன் புருஷோத்தமன். அவனுக்கு ஸர்வதீர்த்த அபிஷேகங்களும் நடைபெறும்.

(ஸ்கந்த புராணம்)

# UNCOVERING THE STORY ON THE STONE

Deccan Herald (Bangalore Edition) June 06, 2004

Dr. Nagaswamy has had numerous opportunities to read and interpret the history hidden behind millions of rock inscriptions, points out L Subramani.

When Dr. Nagaswamy studied an artefact, his eyes twinkled. His musing face mirrored the intensity of his faculties, as he tried to place it in the historical scheme of things. With a broad smile, he related myriads of stories the object reveals to him. “These are the only means of relating to the past, a way of communicating with the intellects of our ancestors,” he would taper off his inference.

The object he held in his hand isn’t related to his area of specialization and isn’t particularly useful to him in any sense. It is an arrow head made in stone, gifted by an American Indian, during one of his visits to the US. “The Indians make this even to-day. A precious symbol of their culture, which they preserve to date. The fact that such an object, atleast the technique of making it, survived thousands of years, startles me,” says Dr Nagaswamy.

As the director of Tamil Nadu State Archaeological Department, he grew passionate about the subject. Epigraphy being his forte, he had numerous opportunities to read and interpret the history hidden behind millions of rock inscriptions scattered around South India. “They tell us the comprehensive development of our civilisation - the political and economic systems that prevailed much before the arrival of the British,” he mentions.

He believes archaeology status as a discipline is becoming uncertain both at home and abroad. Like experts around the world, he was distressed by the sight of Baghdad museum being robbed and destroyed in the anarchy that ensued with the war in Iraq. While policies at home are barely encouraging, Dr. Nagaswamy finds the silver lining in the interest youngsters show towards history.

He says there must be efforts to encourage youngsters to get involved in archaeology, along with promoting cultural exchanges by learning foreign languages. This, in his opinion, would reveal more about the contacts that existed between India and other South East Asian nations. “It will also give Indians a chance to tell the world the significant contribution made, Development of other cultures. Of course, such studies would be extensive and would go on for a long time.

He also believes history has to be taken out of classrooms and taught in such a way that it prompts children to keep learning, even as they choose different career paths. “It would pass on knowledge about our culture to future generation,” says Dr. Nagaswamy. Bridging India with the far east by highlighting our historical relationship with the region, is the focus of Dr. Nagaswamy’s efforts now.

His ability to passionately express his feelings for artefacts is noted by scholars around the world. Dr. Nagaswamy also has thousands of books, audio and video materials on Indian arts for reference by research scholars.

# ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் 2

ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள்

பி. ஆர். கண்ணன்

ஒவ்வொரு வாக்யம் முடிந்தவுடன்

**ஸ்ரீ சரணா: அனுக்ருண்ணந்து**

என்று சிஷ்யர்கள் கூறுவது ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாயம்.

**வாஸனாக்ஷய மனோ நாஸ தத்வ ஞான அப்யாஸவஸாத், ஞான ரக்ஷா, தப்; ஸித்தி: ஸர்வ ஸமத்வம், து: கனிவ்ருத்தி:, ஸுகாவிர்பாவ: இத்யேத் பஞ்ச ப்ரயோஜண ஸித்திர் பூயாத் ।। 11 ।।**

*தத்வ ஞான அப்யாசத்தால் வாஸனாக்ஷயமும், மனோ நாசமும் ஏற்பட ஞான ரக்ஷை, தத்வ ஸித்தி, எல்லோரிடத்திலும் ஸம நோக்கு, துக்க நிவ்ருத்தி, ஸுக ஆவிர்பாவம் இந்த ஐந்து ப்ரயோஜன ஸித்தி உண்டாகட்டும்.*

**மைத்ரீ கருணா முதித உபேக்ஷா ரூபஸத்வாஸனாபாடவேன ராகாதி துர்வாஸனாக்ஷய: ஸம்யக்பூயாத் ।। 12 ।।**

*விருப்பம் முதலிய துர்வாஸனை நசிக்க, நல்ல வாஸனைகளான நட்பு கருணை உவகை ஔதாஸீன்யம் இவை நன்றாக இருக்கட்டும். (யோக ஸூத்ரம்) கூறுகிறது நட்பு, கருணை, உவகை எளியோரிடத்தில் கருணை, பாபிகளிடத்தில் அலக்ஷியம், புண்யம் செய்தவர்களிடத்தில் மகிழ்ச்சி, இவை ராகமும், த்வேஷமும் போனால் ஏற்படும்.*

**நிரந்தர ஸ்வாத்மானு ஸம்தான வஸாத் மனஸோ வ்ருத்திரூப பரிணாமத்யாகேன நிருத்த தாகாரேண ஆத்மபரிணாமோ த்ருட பூயாத் ।। 13 ।।**

*மனதின் வ்ருத்திகள் மறைய இடைவிடாத ஆத்ம அனுசந்தானத்தால் மனம் ப்ரம்ம நிலையாக பரிமாணம் அடைவது திடமாகட்டும்.*

**ஸமாதி பூர்வக ஸ்ரவண மனன நிதித்யாஸன அப்யாஸபலாத் விஷயாஅஸக்தி:ப்ரஞா மாந்த்யம் விபர்யய: துராக்ரஹச்சேதி வர்தமான ப்ரதிபந்த சதுஷ்டய நிவ்ருத்தி த்வாராஅப்ரதிபத்த அபரோக்ஷ ப்ரம்ம ஸாக்ஷாத்காரோ த்ருட பூயாத் ।। 14 ।।**

*ஸமதம, ஸ்ரவண, மனன, நித்யாஸன, அப்யாஸ, பலத்தால் விஷயங்களில் அசக்தி ப்ரஞ்யையில் மந்தம் மாறுபட்ட சிந்தனை, துர் சிந்தனை இந்த நான்கு ப்ரதிபந்தங்கள் மறைய தடையில்லாத அபரோக்ஷ ப்ரம்ம அனுபவம் திடமாகட்டும்.*

**உபக்ரமாது ஷ்ஸ்ட்விதலிங்கை: அசேஷ வேதாந்தானாம் அத்வைதே ப்ரம்மணி தாத்பர்யாஅவதாரணம் த்ருடீ பூயாத் ।। 15**

*உபக்ரமம் முதலிய ஆறு லிங்கங்களால் உபனிஷத்களில் கூறப்படும் அத்வைத ப்ரம்மத்தில் அவதாரணம் திடமாகட்டும். விளக்கம் விஷய ஆரம்பம், அதன் முடிவு, மீண்டும் சொல்லல், புதிதாகக் கூறல், விஷயத்தை உயர்த்திச் சொல்லல், கற்பனையோடு கூறல் இவை ஆறும் தாத்பர்ய லிங்கங்கள் எனப்படும். பார்க்க வேதாந்த ஸாரம்*

**ஸ்ரீகுருமுகாத் ஸ்ருதி அத்விதீய வஸ்துன: வேதாந்த அனுகுண யுக்திபி: அனவரதம் அனுசிந்தனம் பூயாத் ।। 16**

*குருவின் உபதேசத்தால் வேதாந்தம் காட்டும் யுக்திக்கு இணங்க அத்விதீயமான ப்ரம்மத்தின் சிந்தனை இருக்கட்டும்.*

**விஜாதீய தேஹாதி ப்ரத்யய அனந்தரித ஸஜாதீய சச்சிதானந்த ஆத்ம ப்ரத்யய ப்ரவாஹோ நிரந்தரம் பூயாத் ।। 17**

*ப்ரம்மத்துக்குப் புறம்பான விஜாதீயமான உடல் சிந்தனை நசிக்க ஸஜாதீயமான சச்சிதானந்த ஆத்ம அனுபவ ப்ரவாஹம் தடையின்றி நிரந்தரம் இருக்கட்டும்.*

**(தொடரும்)**

ப்ரதீபப் பேழை

# வள்ளலார் வழங்கிய அருட்பா

மு. சண்முகம்

ஆண்டவன் திருவருள் பெற்ற பெரியார்கள் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவனைக் குறித்துப் பாடும் பாடல்களே அருட்பாக்களாகும். ஆண்டவன் அருளில் தோய்ந்தவர்களே 'நாம் ஆர்க்கும் குடியல்லோம்' என்றும், 'நாக்கொண்டு மானிடம் பாடேன்' என்றும் பெருமிதத்தோடு கூற முடியும். செத்துப் பிறக்கும் சிறுமானிடவரைப் புகழ்ந்து பாடும் புகழ்ப் பாக்கள் உண்மைப் புகழ்ப் பாக்களாக எப்படி இருக்க முடியும்? மக்களைப் புகழ்ந்து பேசுவதெல்லாம் உபசார மொழிகள்; உண்மைப் புகழ் மொழிகளல்ல; இறைவன் புகழே உண்மைப் புகழ். 'இறைவன் பொருள் சேர் புகழ்' என்பர் வள்ளுவப் பெருந்தகை. இறைவனுடைய மெய்ப் புகழை விரும்பினாரிடத்தில் நல்வினை தீவினை என்னும் இருவினையும் அண்டா என்றும் அவர் கூறுகின்றார்.

**இருள் சேர் இருவினையும் சேரா, இறைவன்**
**பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு**

என்பது வள்ளுவர் வாய்மொழி. இறைவனுடைய மெய்ப் புகழைப் பாடும் பாக்களே அருட்பாக்கள் என்னும் கருத்து, அருட்பெருஞ் ஜோதி திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் வாக்கில் வரும்,

**நடராசர் பாட்டே நறும்பாட்டு**
**ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும் பாட்டு.**
**சிதம்பரப் பாட்டே திருப் பாட்டுச்**
**சீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு.**
**அம்பலப் பாட்டே அருட் பாட்டு;**
**அல்லாத பாட்டெல்லாம் மருட் பாட்டு. (31, 32, 33)**

என்னும் நாமாவளிகளில் மிளிர்தல் காணலாம்.

''திருப்பாட்டு'', ''அருட்பாட்டு'' என்பனவற்றைத் தேவார திருவாசகப் பாடல்களுக்குப் பெயராக முன்னையோர் வழங்குவர். இடைக் காலத்தே வாழ்ந்த மக்கள் உள்ளத்திலே பக்திப் பயிர் வளரச் சமயாசாரியர்களின் மணிவாக்குக்கள் காரணமாயிருந்தன.

இப்பாடல்கள் எல்லாம் பண்ணொடு கூடி இனிமையாகப் பாடுவதற்கென்றே அமைந்தவை. ''திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்னும் முதுமொழிப்படி ஓதுவார் உள்ளத்தை நெகிழ்விக்கும் தெய்வப் பாடல்கள் அவை. இப்பாடல்களை யெல்லாம் வள்ளலார் பாடிப் பாடிச் சுவைத்து மகிழ்ந்தவர். 'ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை', 'ஆளுடைய அரசு அருள்மாலை', 'ஆளுடைய நம்பிகள் அருள்மாலை' 'ஆளுடைய அடிகள் அருள்மாலை' என்னும் தோத்திரப் பாக்களிலே முறையே சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் சைவ சமயாசாரியர் நால்வர் புகழையும் வள்ளலார் உளமார, வாயாரப் பாடி உருகுகின்றார். வள்ளலாரின் சுவா நுபூதியை,

**வான் கலந்த மாணிக்க**
**வாசக! நின் வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கால்,**
**நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன் கலந்து, பால் கலந்து,**
**செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, என்**
**ஊன்கலந்து, உயிர் கலந்து,**
**உவட்டாமல் இனிப்பதுவே!**

எனவரும் பாடலிலே காணலாம்.

வள்ளலாரைப் போன்று, இடைக்காலத்துத் தமிழாகிய தேவார திருவாசகங்களை இக்காலத்தார் பொருளுணர்ந்து ஓதுதல் எளிதன்று. தேவாரப் பாசுரங்களை முறையாகப் பண்ணொடு பாடிவந்த மரபும், இவற்றை ஓதுவதற்காகவே இராசராச சோழன், இராசேந்திர சோழன் முதலியோர் நிபந்தம் விட்டதும் எல்லாம் இன்று வரலாற்றுச் செய்திகளாகிவிட்டன. 'தேவாரப் பண்களின் வழிவழி மரபு சோழர் காலத்திற்குப் பின்னர் எப்படியோ நலிந்து மறைவதாயிற்று. தேவாரப் பண்கள் எப்படி அமைந்திருந்தன, அவற்றை எம்முறையில் பாடினர், என்று இப்பொழுது ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். இங்ஙனமாகப் பண்டைத் தமிழ் மரபு மறைந்து வருகின்ற காலத்தே அதனை வாழ வைக்கவே வள்ளலார் வந்தார். இக்காலத்தார்க்கு எளிதில் விளங்கும் வகையிலே இன் தமிழ்ப் பாக்கள் பாடினார். நாடோடிப் பாடல்கள் மெட்டிலேகூடக் கும்மி, ஆனந்தக் களிப்பு, கீர்த்தனை, கண்ணிகள் என்று இவ்வாறு பலப் பல புது முறைகளிலும் பாடினார். இக் காலத்தில் வளர்ந்தோங்கி வரும் தமிழ்

உரைநடைக்கும் வழிகாட்டியாய் விளங்கும் முதல்வர் இவர். தமிழின் புது மறுமலர்ச்சிக்கு ஓர் கலங்கரை விளக்காய் இராமலிங்க அடிகளார் தமிழ் இலக்கிய உலகில் ஒளி வீசித் திகழ்கின்றார்.

ஒருவரோடொருவர் உரையாடி மகிழ்வது போன்ற எளிய நடையிலே வள்ளலார் பாட்டு உள்ளமைக்கு ஓர் எடுத்துக்காட்டு:

**அப்பா! நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்;**
**ஆருயிர்கட்கு எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்;**
**எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே,**
**எந்தை! நினது அருட்புகழை இயம்பிடல் வேண்டும்;**
**செப்பாத மேனிலைமேல் சுத்த சிவமார்க்கம்**
**திகழ்ந்தோங்க, அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்;**
**தப்பேது நான் செயினும், நீ பொறுத்தல் வேண்டும்;**
**தலைவ! நினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே!**

இங்ஙனம் நேருக்கு நேர் பேசுவது போல எளிய பேச்சு நடையில் இறைவனிடம் இராமலிங்க அடிகள் விண்ணப்பஞ் செய்யும் பாடல்கள் பலப் பல. ‘பிள்ளைச் சிறு விண்ணப்பம்’, ‘பிள்ளைப் பெரு விண்ணப்பம்’ முதலியன ஒரு குழந்தை தந்தைபால் தம் குறைகளைக் கூறி முறையிடுகின்ற பான்மையில் உள்ளன. ‘ஆருயிர்கட்கு எல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்’ என்றும், ‘எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே, எந்தை நினது அருட் புகழை இயம்பிடல் வேண்டும்’ என்றும் கூறும் உரைகளிலே உலகமெங்கணும் வாழும் உயிர்கள் பால் அடிகள் கொள்ளும் பரிவு புலனாகும். மன்னுயிர்க்கு இரங்கும் வள்ளலார் உள்ளத்தைப் பின்வரும் பெரு விண்ணப்பப் பாடல் படம் போலக் காட்டுகின்றது.

**வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்**
**வாடினேன்; பசியினால் இளைத்தேன்;**
**வீடுதோறு இரந்தும், பசியறாதயர்ந்த**
**வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்;**
**நீடிய பிணியால் வருந்துகின்றோரென்**
**நேருறக் கண்டு உளம் துடித்தேன்;**

**ஈடு இல்மானிகளாய், ஏழைகளாய் நெஞ்சு**
**இளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன். (58)**

இங்ஙனம் மன்னுயிர்க்கு இரங்கி இறைவன் திருவருளால் அவ்விறைவனைப் போற்றிப் பாடிய வள்ளலார் பாக்களும் இக்காலத்திற்கு ஏற்ற நடையில் அமைந்த அருட்பாக்களாகும். இவற்றுள் ஒரு சிலவற்றையேனும் தெரிவோர் இறைவனுடைய தனிப் பெருங் கருணையையும், கருணையும் பக்தியும் கலந்து பரிமளிக்கும் வள்ளலாரின் உள்ளத்தையும், அடிகளாரின் வாக்கின் சிறப்பையும் நன்குணர்தல் திண்ணம். அருட்பாட்டு, திருப்பாட்டு என்னும் பெயர்களால் சமயாசாரியர் பாடல்களை ஒருசிலர் குறித்தனரேனும், 'தேவாரம்' என்பதே அவர்கள் பாடலுக்குப் பொதுப் பெயராய்ப் பெருக வழங்கி வருகின்றது. தெய்வப் பாடல்கள் இனி வருங்காலத்தில் தோன்றுமேனும், 'அருட்பா' என்னும் திருநாமம் இராமலிங்க வள்ளலார் பாக்களுக்கே உரிமைப் பெயராய் நிலைத்து விட்டது. இந்த அருட்பாக்களை நாம் போற்றுவோம். வள்ளலார் வாழையடி வாழையாக வரும் திருக்கூட்ட மரபில் வந்தவர். இந்தத் தெய்வத் திருக்கூட்ட மரபு நீடு வாழ்க!

**வாழையடி வாழைஎன வந்த திருக்கூட்ட மரபினில்**
**யான் ஒருவன் அன்றோ? வகை அறியேன்! இந்த**
**ஏழை படும் பாடு உனக்குத் திருவுளச் சம்மதமோ?**
**இது தகுமோ? இது முறையோ? இது தருமம் தானோ?**
**மாழை மணிப் பொது நடஞ் செய்வள்ளால்! யான் உனக்கு**
**மகன் அலனோ? நீ எனக்கு வாய்த்த தந்தை அலையோ?**
**கோழை உலகுயிர்த் துயரம் இனிப் பொறுக்கமாட்டேன்!**
**கொடுத்தருள், நின் அருளொளியை; கொடுத்தருள் இப்பொழுதே!**

# ¸U÷Áuzvß ö£¸ ø©!

-- ஸ்ரீ N. சந்தான சாஸ்த்ரிகள்,

அம்பத்தூர், சென்னை-53.

வேதபு ருஷ த்யானத்துடன் நான் இந்தத் தொகுப்பைத் தொடங்குகிறேன்.

**ஹிரண்ய கர்ப்பானன மாருதோத்தா:**<br>
**ஹிதாய லோகத்ரிதயஸ்ய ஸம்ஸ்தா: ।**<br>
**நிரந்தரம் ரக்ஷத ந: குலானி**<br>
**வேதா வயம் வ: பரணம் ப்ரபன்னா: ॥**

1. வேதம் என்றால் அறிவு, அறிதல் என்று பொருள்படும். உலகத்தில் பல நூல்கள் உள்ளன. இவற்றில் நமக்கு நன்மை தரக்கூடியதை மட்டுமே நாம் அறிய முயல வேண்டும். வேதம் யாராலும் உண்டாக்கப்பட்டதல்ல. அதிலுள்ள எல்லா மந்த்ரங்களும் ஏற்கனவே இருந்தவை. ரிஷிகள் காரியம் அவைகளைக் கண்டு பிடித்ததே. ஆகையால் அவர்களை மந்த்ர த்ரஷ்டாக்கள் என்கிறோம். பிரதிபலன் பார்க்காத அன்பு இறைவனிடம் மட்டுமே காணமுடியும். ஆகையால் பரமேச்வரனின் மூச்சுக் காற்றான வேதம்தான் நம் வாழ்க்கையை நடத்தப் பிரமாணமாக இருக்கமுடியும்.

2. நான்கு வேதங்களில் முதன்மையாகச் சொல்லப்படுவது ருக்வேதம். இதில் கலியுகத்தின் தொடக்கத்தில் வியாஸர் வேதங்களைப் பாகுபடுத்திய போது 21 சாகைகள் இருந்தன. ஒவ்வொரு வேதத்திலும் 1. மந்த்ரம் (ஸம்ஹிதை), 2. ப்ராஹ்மணம், 3. உபநிஷத் என்று மூன்று பகுதிகள் உள்ளன. தற்போது ஸம்ஹிதையில் ஐதரேயம் ஒன்றும், ப்ராஹ்மணத்தில் கௌஷீதகி, ஐதரேய, பைங்கி, ஸத்யாயன என்ற நான்கும், உபநிஷத்தில் ஐதரேய, கௌஷீதகி என்ற 2 சாகைகளின் உபநிஷத்துகளும் உள்ளன. இவற்றைத் தவிர நாதபிந்து, ஆத்மப்ரபோத, நிர்வாண, முத்கல, அக்ஷமாலிகா, திரிபுரா, ஸௌபாக்யா, பஹ்ருவ்ரச என்ற 8 உபநிஷத்துக்களும்,

108 உபநிஷத் கணக்கில் இருக்கின்றன. இவைகள் ருக்வேத மந்த்ரமாகிய வாங் மே மனஸி'' என்ற பிரார்த்தனை மந்த்ரங்களுடன் தொடங்குவதால், இவைகள் ருக்வேதத்தைச் சார்ந்தவை என்று அறியப்படுகிறது. இருந்தாலும் ருக்வேதத்தின் எந்த சாகையைச் சேர்ந்தவை எனக் குறிப்புக் கிடைக்கவில்லை.

3. ஸம்ஹிதையில் 10 மண்டலங்கள் உள்ளன. இவைகள் அனைத்தும் 8 அஷ்டகமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு அஷ்டகத்திற்கு 8 அத்தியாயம் வீதம் 64 அத்தியாயங்கள் உள்ளன.

மொத்த ஸூக்தங்கள்-1028

வர்க்கங்கள் -- 2024

ருக்குகள் -10552

அக்ஷரங்கள்-3,97,625

இவ்வேதத்தை ஓதுவதில் ப்ரக்ருதமாக ஸம்ஹிதை, பதம், க்ரமம் என்னும் முறையையடுத்து, 8 விக்ருதிகள் ஆகிய ஜடா, மாலா, சிகா, ரேகா, த்வஜ:, தண்ட:, ரத:, கன முதலியன உள்ளன. வேறு எந்த வேதத்திலும் இவ்வளவு கடினமான ஓதும் முறைகள் வழக்கத்தில் இல்லை.

4. பொதுவாக தேவதைகளை அழைப்பதற்கு (ஆஹ்வானம்) ருக் வேதமும், ஆகுதிகள் கொடுப்பதற்கு யஜுர்வேதமும், திருப்திப்படுத்துவதற்கு ஸாமவேதமும் என்று விதித்திருக்கிறார்கள். ஆகையால் ஆஹ்வான மந்த்ரங்கள் யாவும் இந்த வேதத்திலேயே உள்ளன.

5. ருக் வேதத்தில் பஞ்சருத்திரங்கள் என்று 5 விதமான ஸூக்தங்கள் உள்ளன. அவை பின்வருமாறு:-

(அ) கத்ருத்ராய ப்ரசேதஸே

(ஆ) இமா ருத்ராய தவஸே

(இ) ஆதே பிதர்மருதாம்

(ஈ) ஸோமா ருத்ரா

(உ) இமாருத்ராய ஸ்திரதன்வனே கிர:

இவை எல்லா ஜப காலங்களிலும், விசேஷமாக ப்ரதோஷ காலங்களிலும் பாராயணம் செய்யப்படுகின்றன.

கர்மாக்களில் 11ஆம் நாள் உத்தரக்ரியையில், வ்ருஷோத் ஸர்ஜனத்தின் போது, ருத்ரப்ரீதிகரமாக இந்த ஜபம் விதிக்கப்பட்டிருக்கிறது.

6. எல்லா விதமான காம்யங்களுக்கும் விசேஷமான மந்த்ரங்கள் உள்ளன.

மன்யு ஸூக்தம்-காரிய ஸித்தி, சத்ரு ஜயம்
ஐக்யமத்ய ஸூக்தம்-ஒற்றுமை ஏற்படுத்த
தேவி (வாதம்ப்ருணி) ஸூக்தம்-மேதாவ்ருத்தி, வாக்கு வல்லமை
ஆயுஷ்ய ஸூக்தம்-ஆயுள் விருத்தி, ரோக நிவ்ருத்தி

மிகவும் விசேஷமான மஹா ப்ராயச்சித்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது பவமான ஸூக்தம். இது 610 ரிக்குகளைக் கொண்டது. இதைப் பாராயணம் செய்தால் கர்ப்பஜனன முதல் பாராயண காலம் வரை உள்ள எல்லாப் பாபங்களையும் போக்கடிக்க வல்லது.

7. ருக் வேத ஸம்ஹிதையில் 20 சந்தஸ்கள் (மீட்டர்கள்) உள்ளன. அவை காயத்ரி, உஷ்ணிக், அநுஷ்டுப், ப்ருஹதீ, பங்க்தீ, த்ருஷ்டுப், ஜகதீ, அதி ஜகதீ, ஸக்வரீ, அதி ஸக்வரீ, அஷ்டி:, அத்யஷ்டி:, த்ருதி:, அதி த்ருதி:, த்விபதா காயத்ரி, த்விபதா விராட், த்விபதா த்ருஷ்டுப், த்விபதா ஜகதீ, ஏகபதா விராட், ஏகபதா த்ருஷ்டுப். ப்ராஹ்மணம் உபநிஷத்துக்களுக்கு ஸ்வரம் கிடையாது.

8. மந்த்ர சாஸ்திரங்கள் ரீதியாக 'ஸப்தசதீ' போன்ற பாராயணங்கள் செய்யப்படும் போதுகூட, அவைகளைப் பூரணமாக்குவதற்கு தேவீ ஸூக்த, ராத்ரி ஸூக்த ஜபங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் ரிக்குகளாக இருப்பதால், ப்ராயச்சித்த ஹோமங்களில் விசேஷ விதியாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

9. இந்த வேதத்தைச் சேர்ந்த 10 உபநிஷத்துகளிலும் ப்ரணவ த்யானம் (ஹம்ஸமாக), நாராயணனை ப்ரஹ்மமாக உபாஸனை, பரமஹம்ஸ நிலை, அக்ஷமாலை (ஜபமாலை) அமைப்பு, ஓங்கார அர்த்தமான சித்சக்தி, ஸ்ரீ வித்யா (சௌபாக்ய லக்ஷ்மி) உபாஸனை, எல்லாமாய் இருக்கும் சக்தியின் பெருமை முதலிய விஷயங்களைக் கூறி, அவரவர் பூர்வ வாசனைக்குத் தக்கபடி உபாஸனைகளைத் தேர்ந்தெடுத்து முக்தியடையும் வழிகளைக் குறிப்பிடுகிறது.

மேலும் வேதகாலத்தில் சமூகத்தில் வாழ்க்கை முறை எப்படி இருந்தது என்பதும் இந்த வேதத்தின் மூலம் அறியலாம்.

**ஸர்வே ஜனா ஸுகினோ பவந்து.**

# ` º¯ ß A Î zu _U» ¯áúº÷Áu®

-- ஸ்ரீ P.M. விஜயராகவ சாஸ்திரி

''வேதோசகிலோ தர்ம மூலம்'' - என்ற இந்த வாக்கியம், தர்மங்கள் அனைத்திற்கும் வேதங்களே மூலகாரணமானவை என்று கூறுகிறது. தர்மங்களோவெனில், உலகின் இயக்கத்திற்கு அச்சாணி போன்றவை எனப்படுகின்றன. எனவே, உலகத்திற்கு ஆதாரமாக விளங்கும் தர்மங்களைப் பிரகாசப்படுத்த வந்த வேதங்களும் உலக மக்களுக்கு மிகவும் அவசியமானவைகளே!

'வேத:' - என்ற ஸம்ஸ்கிருதச் சொல், வித - ஞானே' என்னும் தாதுவிலிருந்து உண்டானது. அதன் பொருளை 'அறிவுக் களஞ்சியம்' என்பதாகக் கூறலாம். மனுஸ்ம்ருதியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது-''கண் முதலான இந்திரியங்களைக் கொண்டு நேரிடையாகவோ, அல்லது கண்ணுக்குத் தெரிகின்ற ஒரு (காரிய) வஸ்துவைக் கொண்டு, அப்படித் தெரியாத (மற்றொரு) வஸ்துவை ஊகிப்பது என்னும் அனுமானத்தின் மூலமாகவோ எந்த விஷயங்கள் அறிய முடியாதவைகளோ, அவைகளைத் தெரிவிப்பதனால் வேதம் எனும் சொல், அர்த்தமுடைய சொல்லாகவே விளங்குகிறது.

இத்தகைய பெருமை பெற்ற வேதங்கள், வேதவ்யாஸருடைய காலத்திற்கு முந்தைய காலத்தில் பிரிவில்லாதபடி எல்லாம் ஒரே வேதராசியாக இருந்தனவென்றும், கலியுகத்தில் பிறக்கும் மனிதர்களின் நிலையை அறிந்த வேதவியாஸரால், ஒன்றான அந்த வேதக் கூட்டமானது, ''ரிக்-யஜுஸ்-ஸாமம் - அதர்வணம் என்ற 4 பெயர்களோடு 4 வேதங்களாகப் பிரிக்கப்பட்டனவென்றும், பல புராணங்களின் வாயிலாக நாம் அறிகிறோம். இவ்வாறு பிரிக்கப்பட்ட 4 வேதங்களையும் வேதவ்யாஸர், முறையே -''ஸுமந்து, வைசம்பாயனர், ஜைமினி, பைலர்' என்ற 4 ரிஷிகளிடம் ஒப்படைத்து, உலகில் பிரசாரம் செய்ய உத்தரவிட்டார்.

இவ்வாறு வேதப் பிரசாரம் முறையாக நடைபெற்றுவரும் காலத்தில் ஒரு சமயம், வைசம்பாயனருடைய மருமானும் - சிஷ்யரும் - மஹாமேதாவியும் - யோக வல்லமை பொருந்தியவரும் - மஹாவிஷ்ணுவின் அவதாரமுமான யாக்ஞவல்க்யர் என்பவர், தம் குருவான வைசம்பாயனருக்கு ஹிதம் செய்யும் எண்ணத்தில் - அவருக்கு நேர்ந்த தோஷத்திற்குப் பிராயச்சித்தத்தைத் தாமே செய்வதாகக் கூறினார். இதை மனமுவந்து

ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தும், ஏனோ வைசம்பாயனர் கோபமுற்றார். (இவ்விடத்தில்-விஷ்ணுவின் அவதாரமான யாக்ஞவல்க்யரைக் கொண்டு பிற்காலத்தில் நடக்க வேண்டியவைகளைத் தன் ஞானத்தினால் உணர்ந்தே, வைசம்பாயனர் கோப நாடகத்தைக் காட்டினார் என்று கொள்ள வேண்டுமே தவிர, வேறு விதத்தில் காரணம் கூறுவது வைசம்பாயனருக்கே குறை கற்பிப்பதாக ஆகும்). அந்தக் கோபத்தின் விளைவு - வைசம்பாயனரிடம் கற்ற வித்யையை அவரிடமே தக்ஷிணையாகக் கொடுத்து, காயத்ரி தேவியின் மஹிமையினால் சூர்யனை அடைந்து, உலகில் அதுவரை பிரசாரத்தில் இல்லாமல் இருந்து வந்த 'அயாதயாமம்' என்ற பெருமை பெற்ற வேதபாகங்களைப் பெற்று வந்தார். அந்த வேதங்களே சுக்ல யஜுர் வேதம்' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. இந்த சுக்ல யஜுர் வேதமானது ஆதித்ய பகவானிடமிருந்து பெறப்பட்டனவை என்பதால், ஆதித்ய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவை என்றழைக்கப்படுகின்றன. வியாஸர் யஜுர் வேதமாகப் பிரித்த 101-சாகைகளில், முதல் 15 சாகைகள் சுக்ல யஜுர் வேத சாகைகள் எனவும், மற்ற 86 சாகைகள் க்ருஷ்ண யஜுர் வேத சாகைகள் எனவும் வழக்கத்தில் உள்ளன என்று 'சரண வ்யூஹம்' முதலான க்ரந்தங்கள் மூலமாகத் தெரிய வருகின்றது. சுக்ல- என்ற பதத்தினால் - வேதத்தின் இருபகுதிகளான 'மந்த்ரம்' 'ப்ராஹ்மணம்' என்பவை, ஒன்றோடொன்று கலப்பின்றி, சுத்தமாக இருப்பது குறிப்பிடப்படுகிறது என்றும், க்ருஷ்ண -என்ற பதத்தினால் மேற்கூறிய மந்த்ர - ப்ராம்ஹணங்கள் ஒன்றோடொன்று கலந்திருப்பது குறிப்பிடப்படுகிறது என்றும், ஸ்ரீஸாயணாசார்யரின் பாஷ்ய வாக்கியம் நமக்கு வெளிப்படுத்துகிறது.

சுக்ல யஜுஸ்-க்ருஷ்ண யஜுஸ் ஆகிய இருவேதங்களுமே சாஸ்த்ரங்களில் யஜுர்வேதம் என்ற பெயரால் குறிப்பிடப்படுகின்றன. அதற்கேற்ற படி இரு யஜுர்வேதங்களும் 'இஷேத்வா' என்ற பதங்களுடன் தொடங்கி, யாகத்தில் அத்வர்யுவாக இருப்பவர் சொல்ல வேண்டியதான மந்த்ரங்களை ஸம்ஹிதா பாகத்தில் கூறுகின்றன. எனவே, இந்த இருபிரிவுகள் கொண்ட யஜுர் வேதமானது 'அத்வர்யு காண்டம்' என்றும் அழைக்கப்படுகிறது. அனைத்திற்கும் மேலாக மத்யமணி போல், 'நம: ஸிவாய' என்ற பஞ்சாக்ஷரத்தை உள்ளடக்கிய ஸ்ரீருத்ரம், அதைத் தொடர்ந்து வரும் 'சமக ப்ரச்னம் ஆகியவை, இந்த இரு யஜுர்வேதங்களுக்கும் பெருமை சேர்க்கின்றன.

சுக்ல யஜுர்வேதத்தின் ஸம்ஹிதை நான்கு தசகங்களுடன், நாற்பது அத்யாயங்களைக் கொண்டு விளங்குகிறது. ப்ராஹ்மண பாகம்' சதபத ப்ராஹ்மணம்' என்ற பெயருடன்,

17-காண்டங்களுடன் 104-அத்யாயங்களைக் கொண்டதாக இருந்து வருகிறது. ஸம்ஹிதா பாகத்தில் 'உதாத்த- அனுதாத்த- ஸ்வரித- ப்ரசய- ஜாத்ய- அபிநிஹித- ஸர்வானுதாத்த' என்பதான ஏழு ஸ்வரங்களும், ப்ராஹ்மண பாகத்தில் 'உதாத்த-அனுதாத்த' என்ற இரு ஸ்வரங்களும் இருந்து வருகின்றன. ஸம்ஹிதையில் தர்சபூர்ணமாஸம் என்ற கர்மாவில் ஆரம்பித்து, ப்ரவர்க்யம் வரையிலான ஸகல கர்மாக்களும், கூறப்பட்டுள்ளன. மேலும், ஸம்ஹிதையின் கடைசி அத்யாயமான 'ஈசாவாஸ்யம்' என்பது ப்ரஹ்மவித்யையைக் கூறும் 'ஸம்ஹிதோபநிஷத்தாக' திகழ்கிறது. சதபதப்ராஹ்மணமானது, முதல் காண்டத்தில் ஆதானம், அக்னிஹோத்ரம் முதலிய கர்மாக்களை விஸ்தாரமாகக் கூறத்தொடங்கி, ப்ரவர்க்யகர்மா வரையிலான பல யாகங்களையும், அவைகளின் அங்கங்களையும் 16-காண்டங்களில் பிரகாசப்படுத்துகிறது. 17-வது காண்டம் 'பிருஹதாரண்யகோபநிஷத்' என்ற பெயருடன், ப்ரஹ்மவித்யா-க்ரந்தங்களின் சிகரமாக விளங்குகிறது. யஜுர் வேதத்தின் மஹா வாக்கிய 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்பதும் இங்குதான் கூறப்பட்டுள்ளது. இந்த வேதத்திற்கு ப்ராதியாக்யம்-க்ருஹ்ய ஸூத்ரம்-ஸ்ரௌத ஸூத்ரம் முதலியவைகளை, காத்யாயன-மஹரிஷி செய்துள்ளார். மேலும், இந்த வேதத்தின் சாந்திபாடமான 'பூர்ணமத:' என்று தொடங்கும் மந்த்ரம், எல்லாமாக விளங்கும் பூர்ணமான பரப்ரஹ்மத்தின் தத்துவத்தை அழகுற விளக்குகிறது !!

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே।
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவமிஷ்யதே।
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: !!!

# ஸ்ரீமத் தேவி பாகவதம் -21

*பி. ஆர். கண்ணன்*

***ஸாவித்திரி***



*வேதஜனனி, மந்த்ரமாதா ஆகிய ஸாவித்திரியை பிரம்மா பூஜித்தார். பூலோகத்தில், ராஜா அஸ்வபதி, குழந்தைச்செல்வம் வேண்டி, வஸிஷ்டரின் ஆக்ஞைப்படி, புஷ்கர க்ஷேத்திரத்தில் 100 வருஷங்கள் ஸாவித்திரியின் கிருபையை நாடி தபஸ் செய்தார். அசரீரியாக 10 லக்ஷம் காயத்ரி ஜபம் செய்யுமாறு ஆக்ஞை பிறந்தது. அப்போது பராசர மஹரிஷி வந்து அஸ்வபதிக்கு ஸாவித்ரி மந்த்ரம், பூஜா விதானம், காயத்ரி மஹிமை எல்லாம் உபதேசித்தார். காயத்ரி ஜபம் ஸகல பாபங்களையும் போக்கவல்லது.* ***யாவஜ்ஜீவநபர்யந்தம் த்ரி: ஸந்த்யாம் ய: கரோதி ச । ஸ ச ஸூர்யஸமோ விப்ர: தேஜஸா தபஸா ஸதா ।।*** *எவனொருவன் வாழ்நாள் முழுதும் மூன்றுகாலமும் விடாமல் ஸந்த்யாவந்தனம் செய்கிறானோ, அந்த பிராமணன் தபஸினால் சூரியனுக்கு ஸமமான தேஜஸை அடைகிறான். அஸ்வபதி, ஜ்யேஷ்ட (ஆனி) க்ருஷ்ண சதுர்தசியன்று ஆரம்பித்து 14 வருஷம் காயத்ரி ஜபம், பூஜை சிரத்தையுடன் செய்யவே, ஸாவித்ரிதேவியின் தரிசனத்தைப் பெற்றார். தேவியின் அனுக்ரகத்தினால், ஸாவித்ரிதேவியின் அம்சமான குழந்தை பிறந்தது. அஸ்வபதியும், பத்னி மாலதியும் ஸாவித்ரி என்றே பெயரிட்டனர். ஸாவித்ரிக்கு விவாக வயது வந்தபின், அவளே பிதாவின் சொற்படி த்யுமத்ஸேன ராஜாவின் புத்திரன் ஸத்யவானைத் தேர்ந்தெடுத்தாள். நாரதர் ஸத்யவானுக்கு ஒருவருஷ ஆயுளே மீதமிருப்பதைக்கூறியும், ஸாவித்ரி கவலைப்படாமல் ஸத்யவானையே மணந்தாள். ஒரு வருஷம் கழிந்தது. குறிப்பிட்ட தினத்திற்கு மூன்று நாள் முன்னதாகவே வ்ரதமிருந்து, ஸாவித்ரி அன்றைய தினம் ஸத்யவானுடன் காட்டிற்கு மரம் (ஸமித்) எடுத்துவரச் சென்றாள். ஸத்யவான் மரத்திலிருந்து கீழே விழுந்து பிராணனை விட்டான். அப்போது யமதர்மராஜா தானே நேரில் வந்து, அவனுடைய கட்டைவிரல் அளவுள்ள ஸூக்ஷ்மசரீரத்தை எடுத்துச் சென்றார். ஸாவித்ரியும் பின்தொடர்ந்தாள். யமன் தடுத்தும் கேட்காமல், அவள்*

*கூடச்சென்றபோது, யமனுக்கும், ஸாவித்ரிக்கும் தர்மஸம்பந்தமான ஸம்வாதம் ஏற்பட்டது. யமன் தெளிவுபடுத்தியவை:*

*கர்மபலனால் மறு ஜன்மமும், ஆயுஸும் தீர்மானமாகின்றன. வேதத்தில் கூறப்பட்ட கர்மங்களே, வர்ணாஸ்ரம தர்மத்தைச் சார்ந்த கர்மங்களே மங்களமளிப்பவை. ஸத்-அஸத், அதாவது எப்போதும் சாஸ்வதமாக நிலைத்துநிற்பது, அவ்வாறு நில்லாதது, இந்த வேற்றுமையை அறிதல் ஞானமாகும். ஞானமே மோக்ஷகாரணம். கர்ம உத்பத்தி பாரததேசத்தில்தான்; பாக்கி இடங்களில் கர்மபலனை அனுபவித்தலே. பாரதத்தில் மனிதப்பிறவி ஸ்ரேஷ்டம், அதிலும் பிராம்மண ஜன்மம், அதைவிட பிரம்மநிஷ்ட பிராம்மணன் உயர்ந்த ஜன்மம். கர்மத்தை பலனில் பற்றோடு செய்தால் அப்பலன் கிடைக்கும்; பிரம்மலோகம் போன்ற லோகங்களுக்குப் போய் மறுபடியும் பூமியில் பிறவி. பலனில் பற்றில்லாமல் செய்தால் பக்தியும் மோக்ஷமும் ஸித்திக்கும். கர்மம் கோடிக்கணக்கான கல்பங்கள் ஆனாலும் அனுபவிக்காமல் தீராது.*

*யமன் ஸாவித்திரியின் தர்மத்திலுள்ள அதீத ஈடுபாட்டினால் சந்தோஷப்பட்டு வரன்களை அவளுக்கு அளித்தார். ஸாவித்ரியின் வேண்டுதல்படி, ஸத்யவானுடன் ஸௌபாக்கியவதியாக லக்ஷ வருஷங்கள் இருந்து, 100 புத்ரர்களைப் பெற்று, கடைசியில் விஷ்ணுலோகப்ராப்தி; ஸாவித்ரியின் பிதாவுக்கும் 100 புத்ரர்கள்; ஸாவித்ரியின் மாமனார் த்யுமத்சேனருக்கு கண்பார்வை, இழந்த ராஜ்யம் திரும்பப்பெறுதல் ஆகிய வரன்கள் கிடைத்தன. மேலும் தர்மசம்பந்தமான ஸம்வாதம் தொடர்ந்தது.*

*தானம் மிகச் சிறந்தது; புண்யதீர்த்தத்தில் செய்யும் தானம் 100 மடங்கு பலனை அளிக்கும். பலவிதமான தானங்களின் பலனாக பல உயர்ந்த லோகங்களில் பல வருஷ வாசம் கிடைக்கிறது. அன்னதானத்தினால் சிவலோகத்தில் அன்ன அம்ச எண்ணிக்கையளவு வர்ஷங்கள் வசிக்கலாம். கோதானத்தினால் விஷ்ணுலோகத்தில் பசுவின் ரோம எண்ணிக்கையளவு வர்ஷங்கள் வசிக்கலாம். இவ்வாறே பல தான பலன்கள். சிவலிங்க, ஸாலக்ராம, பகவதி பூஜாபலன்கள் வெகு விசேஷமானவை. பகவதியின் மந்த்ர உபாசனையினால் மணித்வீபத்தில் ஸாரூப்யவாசம் கிடைக்கும். நாமஸங்கீர்த்தனத்தின் பலனும் வெகு விசேஷமானது.*

*ஸாவித்ரி வெகு ஆனந்தமாக யமாஷ்டகம் என்கிற ஸ்தோத்ரத்தைச் சொன்னாள். யமன் சந்தோஷித்து மாயாபீஜத்தை உபதேசித்தார். பாபங்களின் வரிசை, நரகங்களின் வர்ணனை எல்லாம் சொல்லி, சிவன், விஷ்ணு, அம்பாள், கணபதி, சூரியன் ஆகியோர் மத்தியில் பேதபுத்தி கற்பிப்பவன் பிரம்மஹத்தி பாபம் அடைவான்; சந்த்ர சூர்ய*

*க்ரகணங்களின்போது சாப்பிட்டால் அன்ன அம்ச அளவு நரகவாசம் கிட்டும் என்றார். ஸாவித்ரி தேவிபக்தியைப் ப்ரார்த்திக்க, யமன் அனுக்ரகித்தார். தேவியின் மஹிமையை சேஷன் 1000 முகங்களாலும், சிவன் 5 முகங்களாலும், பிரம்மா 4 முகங்களாலும், சுப்பிரம்மண்யர் 6 முகங்களாலும், விஷ்ணுவும், ஸரஸ்வதியும் ஒரு முகத்தாலும் வர்ணிக்கமுடியாது.*

*யமன் திரும்பிவந்து ஸத்யவானுக்கு புனர்ஜீவன் கொடுத்துவிட்டுப் போகும்போது, ஸாவித்ரி யமதர்மராஜன் பிரிவினால் அழுதாள்; யமனும் அழுதார்.* ***ஸவிது ஸசாதிதேவீ ஸா மந்த்ராதிஷ்டாத்ருதேவதா ந ஸாவித்ரீ ஹ்யபி வேதாநாம் ஸாவித்ரீ தேந கீர்திதா*** *।। சூரியனுக்கும், மந்த்ரங்களுக்கும் ஆதாரதேவதை ஸாவித்ரி; வேதங்களின் தாயாகவும் இருப்பதால், அவள் ஸாவித்ரி எனப் போற்றப்படுகிறாள்.*

***லக்ஷ்மி***

*வைகுண்டத்தில் மஹாலக்ஷ்மி, ஸ்வர்க்கத்தில் ஸ்வர்க்கலக்ஷ்மி, பாதாளத்தில் நாகலக்ஷ்மி, ராஜாவின் அரண்மனையில் ராஜலக்ஷ்மி, க்ருகத்தில் க்ருகலக்ஷ்மியாக அருள்பாலிக்கிறாள்.* ***லக்ஷ்யதே த்ருஸ்யதே விஸ்வம் ஸ்நிக்தத்ருஷ்ட்யா யதாநிஸம் । தேவீபூதா ச மஹதீ மஹாலக்ஷ்மீஸ்ச ஸா ஸ்ம்ருதா ।।*** *பெருந்தேவியான மகாலக்ஷ்மி உலகம் முழுவதையும் எப்போதும் காப்பதில் லக்ஷ்யத்துடனும், அருள்நிறைந்த ஈரப்பார்வையுடனும் விளங்குகிறாள். ஒரு சமயம் துர்வாஸ முனிவர் வைகுண்டத்தில் விஷ்ணுவிடமிருந்து கிடைத்த பாரிஜாத புஷ்பத்தை வழியில் சந்தித்த இந்த்ரனுக்குக் கொடுக்க, இந்த்ரன் பதவி மதத்தினால் புஷ்பத்தை அலக்ஷ்யமாக தன் வாகனமான ஐராவத யானையின்மீது போட்டார். யானை விஷ்ணுபோல் தேஜஸ்வியாகி வனத்தில் ஓடி மறைந்தது. துர்வாஸர் கோபத்தினால், லக்ஷ்மி ஸ்வர்க்கத்தைவிட்டு மறையட்டுமென்று சபித்தார். விஷ்ணுவிற்கு நைவேத்யம் செய்யப்பட்ட பழமோ, ஜலமோ, எதுவோ கையில் கிடைத்தவுடனேயே உபயோகப்படுத்த வேண்டும். அலக்ஷ்யமாக தள்ளிவைத்தால் பிரம்மஹத்தி தோஷம் வந்துசேரும். அவனுடைய வளம், புத்தி எல்லாம் கெட்டுப்போய், தன் நகரத்தைவிட்டே அகல நேரும். இந்த்ரன் துர்வாஸரின் பாதத்தில் விழுந்து அழுது ஞானோபதேசத்தைப் பிரார்த்திக்கவே, துர்வாஸர் சொன்னார்: ஐஸ்வர்யமதம் எல்லா பாபங்களுக்கும், ஜன்ம, ம்ருத்யுவாகிய ஸம்ஸாரத்திற்கும் காரணம்; புண்யத்தால் குருக்ருபை கிடைத்து, ஒருவன் நிவ்ருத்தனாக ஆகி முக்தியடைகிறான்.*

இந்த்ரன் அமராவதி ஒரே நொடியில் அசுரர்கள் ஆக்ரமித்து, தேவர்கள் மறைந்துபோய் கஷ்டங்கள் மிகுந்ததைப் பார்த்து துக்கத்தினால் குரு ப்ருஹஸ்பதியை நாடினார். குருவோடு இந்த்ரன் பிரம்மாவிடம் சென்று முறையிட்டபோது பிரம்மா ஆச்சரியப்பட்டார், பரம ஞானிகளின் குலத்தில் உதித்த இந்த்ரன் எவ்வாறு இத்தகைய கொடிய பாபத்தைச் செய்தார் என்று. பின்னர் அவர்களெல்லோரும் விஷ்ணுவிடம் சென்றார்கள். அவர் அபயப்ரதானம் அளித்துச் சொன்னார்: 'துர்வாஸர் சிவாம்சமுள்ளவர், என்னிடம் பக்தியுள்ளவர்; அவருடைய சாபத்தினால் லக்ஷ்மியுடன் சேர்ந்து நான் உன் இல்லத்திலிருந்து கிளம்பிவந்தேன். சங்கின் ஒலி, துளஸியினால் பூஜை, சிவனுக்கு அர்ச்சனை, பிராம்மணபோஜனம் ஆகியவை எந்த க்ருகத்தில் இல்லையோ, லக்ஷ்மி அங்கு தங்கமாட்டாள். பாபங்கள், அனாசாரங்கள் உள்ள இடத்தில் லக்ஷ்மிவாசம் இல்லை; பக்தியும், ஆசாரமும் உள்ள க்ருகத்தில் லக்ஷ்மி வாசம் செய்வாள்.

விஷ்ணு, லக்ஷ்மியை பாற்கடலில் உதிக்கச் சொல்லி, தேவர்களிடம் சமுத்திரமந்தனம் செய்ய ஆக்ஞாபித்தார். ஸமுத்திரத்திலிருந்து தன்வந்தரி, அம்ருதம், உச்சைஸ்ரவஸ் என்ற குதிரை, ரத்னங்கள், ஐராவதம், வனமாலை, அப்ஸரஸ்கள், லக்ஷ்மியும் உண்டாகினர். லக்ஷ்மி கடாக்ஷத்தினால் தேவர்களுக்கு ஸகல வைபவமும் கிட்டியது. இந்த்ரன் லக்ஷ்மி பூஜை விதானப்படி செய்து, 10 லக்ஷம் தடவை மூலமந்த்ரஜபம் செய்து, ஸ்தோத்ரம் சொல்லி சந்தோஷப்படுத்தவே, லக்ஷ்மிதேவி ப்ரத்யக்ஷ தரிசனம் தந்து எல்லா அனுக்ரகத்தையும் வழங்கினாள்.

## ஸ்வாஹா, ஸ்வதா, தக்ஷிணா தேவிகள்

பூமியில் விஷ்ணுவின் அம்சமாக உள்ள யக்ஞ அக்னியில் கொடுக்கப்பட் ஆஹுதிகள் தேவர்களை அடையவில்லை. தேவர்கள் பிரம்மாவிடம் சரணடையவே, பிரம்மா தேவியைப் ப்ரார்த்திக்க, மூலப்ரக்ருதியின் அம்சமான ஸ்வாஹாதேவி தரிசனம் தந்தாள். ஸ்வாஹாதேவி அக்னியின் பத்னியாக ஆகி, அத்தேவியின் சக்தியினால், யக்ஞ ஆஹுதியின்போது ஸ்வாஹா மந்த்ர உச்சாரணத்தினால், தேவர்களுக்கு ஆகாரம் கிட்டியது. அத்தேவியின் மூலமந்த்ரம், பூஜாவிதானம், ஸ்தோத்ரம் ஆகியவை இங்கு தரப்பட்டுள்ளன.

பிரம்மா ஏழு பித்ருதேவதைகளை ஸ்ருஷ்டி செய்தார் - நான்கு மூர்த்திகள், மூன்று தேஜஸ்கள். பூமியில் ஸ்ராத்தத்தில் அர்ப்பணிக்கப்பட்ட திரவ்யங்கள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பின்னர், பிரம்மாவின் மானஸ புத்ரியாக ஸ்வதாதேவி அவதரித்து, அக்னியை விவாகம் செய்துகொண்டாள். ஸ்ராத்தங்களில் ஸ்வதா மந்த்ர

*உச்சாரணத்தினால், ஆகாரம் பித்ருக்களுக்குக் கிடைக்கிறது. ஸ்வதாதேவியின் மூலமந்த்ரம், பூஜாவிதானம், ஸ்தோத்ரம் இங்கு தரப்பட்டுள்ளன. ஸ்தோத்ரத்தின் பலன் ஸம்பூர்ண தீர்த்தஸ்னான பலனாகும்.*

*தேவதைகள் யக்ஞம் செய்தபோது, அவர்களுக்கு யக்ஞபலன் கிட்டவில்லை. பிரம்மா விஷ்ணுவைத் தியானிக்கவே, லக்ஷ்மியின் வலது பக்கத்திலிருந்து தக்ஷிணாதேவி உதித்தாள். இவள் முன்னால் கோலோகத்தில் கோபியாக இருந்தவள், ராதாவின் சாபத்தினால் வெளியேறி, தபஸ் செய்து, லக்ஷ்மியின் அம்சமாக ஆனவள். யக்ஞபுருஷரை (விஷ்ணுவின் அம்சம்) விவாகம் செய்துகொண்டாள். மூலமந்த்ரம், பூஜாவிதானம் எல்லாம் இங்கு உள்ளன. யக்ஞத்தில் தக்ஷிணை உடனேயே கொடுத்தால்தான் முழுபலன் கிடைக்கும். ஒரு முகூர்த்தம் (48 நிமிஷம்) தாமதித்துக் கொடுத்தால் இரண்டு பங்கும், இன்னும் தாமதமானால் பலமடங்கு அதிகமாகவும் தரவேண்டும் என்று விதி.*

## தேவஸேனா

*ஸ்வாயம்புவமனுவின் புத்ரன் ப்ரியவ்ரதன் தனக்கு புத்ரன்வேண்டி புத்ரகாமேஷ்டி யக்ஞம் செய்தார். பத்னி மாலினி 12 வருஷம் கர்ப்பம் தரித்து, புத்ரன் உயிரற்றுப் பிறந்தான். ராஜா குழந்தையை ருத்ரபூமிக்கு எடுத்துச் சென்று, ஆத்மஞானத்தை மறந்து, ப்ராணத்யாகம் செய்ய முற்பட்டார். அப்போது ஒரு சுந்தரமான தேவியின் ஸ்வரூபம் அத்புதமான விமானத்தில் வருவதைக் கண்டார். வந்திறங்கிய தேவியைப் பூஜை, ஸ்தோத்ரம் செய்தார். தேவி, தான் ஸ்கந்தபத்னி, தேவஸேனா என்று கூறி, கர்மபலனை யாரும் மீறமுடியாது என்றாள். பின்னர் ராஜாவின் பிரார்த்தனைக்கிணங்கி. குழந்தையைக் கையில் எடுத்து உயிர்பெறும்படி செய்து, பின்னர் தானே குழந்தையை எடுத்துச் செல்வதாகக் கூறினாள். ராஜா ஸ்தோத்ரம் செய்து, குழந்தையைத் தருமாறு வேண்டவே, தேவி குழந்தையை அவர் கையில் தந்து, தேவஸேனா பூஜை தொடர்ந்து செய்யுமாறு கூறி, புத்ரன் மிக்க புகழுடன் கொடையாளியாகவும், பலசாலியாகவும், யோகியாகவும் இருப்பான் என்று அனுக்ரகித்து, அவன் விஷ்ணுவின் அம்சம் என்றாள். சுக்ல ஷஷ்டி, குழந்தை பிறந்த ஆறாவது தினம், 21வது தினம், குழந்தைகளின் மங்கள கார்யங்களில் தேவஸேனாவுக்கு விசேஷபூஜை செய்யவேண்டும். மூலமந்த்ரம், ஸ்தோத்ரம், பூஜாவிதானம் எல்லாம் இங்கு உள்ளன. தேவஸேனா ஷஷ்டிதேவி என்றும், முக்கியமாக குழந்தைகளைக் காக்கும் தெய்வம் என்றும் போற்றப்படுகிறாள்.*

*(வளரும்)*


# பங்குனி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 15/3/2022 | செவ்வாய் | ஸ்ரீ காஞ்சி குரு ஜயேந்திர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் ஆராதனை மஹா ப்ரதோஷம் |
| 17/3/2022 | வியாழன் | பௌர்ணமி பூஜை |
| 18/3/2022 | வெள்ளி | பங்குனி உத்ரம் |
| 21/3/2022 | திங்கள் | ஸ்வாதி வேத பாராயணம் |
| 23/3/2022 | புதன் | அனுஷம் தேர், அனுஷம் வேத பாராயணம் |
| 24/3/2022 | வியாழன் | மூலம் தேர் |
| 25/3/2022 | வெள்ளி | மூலம் வேத பாராயணம் |
| 26/3/2022 | சனி | உத்ராடம் தேர் |
| 27/3/2022 | ஞாயிறு | உத்ராடம் வேத பாராயணம் |
| 28/3/2022 | திங்கள் | அவிட்டம் தேர் |
| 28/3/2022 | திங்கள் | ஏகாதசி |
| 29/3/2022 | செவ்வாய் | துவாதசி, ப்ரதோஷ பூஜை |
| 29/3/2022 | செவ்வாய் | அவிட்டம் வேதபாராயணம் |
| 02/4/2022 | சனி | உகாதி, தெலுங்கு வருட பிறப்பு, வஸந்த நவராத்ரி ஆரம்பம் |
| 10/4/2022 | ஞாயிறு | ஸ்ரீ ராம நவமி |
| 12/4/2022 | செவ்வாய் | ஏகாதசி |
| 13/4/2022 | புதன் | துவாதசி |
| 18/03/22, 25/03/22, 01/04/22 - 08/04/22 | | வெள்ளிக்கிழமை பூஜை |

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

**விஸ்வனாத ஐயர் கணபதி - கோ**

நான் நவராத்ரி நாட்களில் பத்து நாளும் காஞ்சீபுரம் சென்று காமாக்ஷி அம்பாளின் உத்ஸவத்தில் பங்கேற்பது வழக்கம். சில சமயம் அம்பாள் சன்னிதிக்கு அபிஷேக காலத்தில் வருவது வழக்கம். ஒரு நாள் பெரியவா கிணற்றிலிருந்து நீர் எடுத்துக் கொண்டிருக்கும் சமயம் நான் அங்கு சில சாமான்களுடன் சென்றேன். பெரியவா தலையில் சந்தனமும் அதன் மேல் குங்குமமும் வைத்திருந்தார்கள். அது பெரிய காயம் போல் தோன்றிற்று. பெரியவா எதற்கு தானே நீர் இறைத்துக் கொள்ள வேண்டும் உதவி செய்ய பலபேர் இருக்கிறார்களே என்று கனத்த மனத்துடன் திரும்பினேன்.



மறு நாள் காமாக்ஷியை தர்சனம் செய்துவிட்டு பெரியவாளை தர்சனம் செய்யப் போனேன். அப்போதும் பெரியவா நீர் இறைத்துக் கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்து அருகில் அழைத்துத் தன் தலையில் இருக்கும் வஸ்த்ரத்தை எடுத்து விட்டு ''என் தலையைப் பார் ஓர் அடியுமில்லை. என்னுடைய மார்க்தான் இருந்தது'' என்று சொன்னார். எனக்கு மகிழ்ச்சிமட்டுமல்ல, என்னுடைய எண்ணோட்டம் அவருக்குத் தெரிந்தது ஆச்சர்யமாயிருந்தது.

**இன்னொரு சம்பவம் :** கார்த்திகை ஸோம வாரம் சிவனுக்கு அபிஷேக ஆராதனைகள் நடக்கும். அன்று இந்தவார அபிஷேகத்தை யார் எற்பது என்று சிஷ்யர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர். பெரியவா மௌனமாக இருந்தார். நான் அந்த சமயம் அங்கே போக என்னைப் பார்த்து இந்த வாரம் ''நீ ஸோமவார பூஜைக்கு ஏற்பாடு செய்'' எண்று கூற நானும் அதற்குச் சம்மதித்தேன். உடனே பெரியவா ஸ்வாமிக்குத் தனியா ஒரு ஸ்டேண்ட் செய்ய உத்தரவிட்டார்கள். மேலும் பூஜா த்ரவ்யங்கள் சனிக்கிழமையே வரவேண்டும் அதை ஸ்ரீகண்டனிடம் தரவும் பணித்தார்கள். நானும் அவ்விதமே செய்து முடித்தேன்.

திங்கட்கிழமை அடை மழை. சென்னையிலிருந்து காஞ்சிக்குப் போக முடியவில்லை. மிகவும் வருத்தத்துடன் பெரியவா படத்தின் முன் அமர்ந்திருந்தேன். மறு நாள் காலை காரியாலயத்தில் 10 மணி அளவில் சிவாசார்யார் ஒருவர் காஞ்சீபுரத்திலிருந்து வந்து ''நீங்க வர முடியவில்லை என்று வருத்ததுடன் இருப்பீர்கள், இந்த ப்ரஸாதத்தை கொண்டு போய் கொடு' என்று பெரியவா ஆணையிட்டார் என்று கூறி சந்த்ரமௌலீஸ்வரர் ப்ரஸாதத்தை என்னிடம் தர பெரியவாளின் அன்பை நினைத்து நெகிழ்ந்தேன்.



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**

ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,

ஸ்ரீமடம் நிர்வாகம்

# புராணக் கதை

*காஞ்சி வாதூலன்*

விதியின் கை வரிசை நாம் எதிர்பார்ப்பது போல் இருக்காது. திடீர் திருப்பங்களுடன் விளையாடும். நல்லதும் நடக்கும், கெட்டதும் நடக்கும் என்று பௌராணிகர் கூற சிஷ்யன் அதை விளக்கக் கேட்டான். அவரும் முன்பே இக்கதையின் ஒரு பாதி கூறியுள்ளேன். மீதி பாதியையும் இப்போது கூறுகிறேன் என்று ஆரம்பித்தார்.

விரிந்து பரந்த ராஜ்யம். ஆயுஷ் என்பவன் அதற்கு அரசன். நல்ல ராஜாவிற்கேற்ற ப்ரஜைகள். அவன் மனதுக்கேற்ற மனைவி இந்துமதி. குறைகள் ஏதுமில்லை. அவர்களுக்கு குழந்தை இல்லை என்பதைத் தவிர. அவர்கள் இருவரும் தம் குரு தத்தாத்ரேயரிடம் முறையிட முதலில் அவர் மறுத்தார் . பின்பு அவர்களின் பிடிவாதத்தைக் கண்டு ஒரு கனியை தந்தார். இந்துமதியும் அதை உண்ண கர்பம் தரித்தாள்.

இதற்கு முன் சிவபார்வதியினரின் குழந்தையாக வந்த அசோக சுந்தரீ தன்னைக் கெடுக்க வந்த ஹுண்டனிடம் ஆயுவின் புத்ரனைத்தான் மணக்கப் போவதாக அறிவித்திருந்தாள். இந்த நிகழ்ச்சியை ஹுண்டன் மறந்தே போயிருந்தான். திடீரென்று ஒரு நாள் அவனுடைய புதல்வி இதை நினைவுறுத்தினாள். ஆயுவின் புதல்வனால் தனக்கு ஆபத்து வரும் என்றறிந்த ஹுண்டன் அகம்பனன் என்னும் அமைச்சனிடம் இந்துமதியின் செவிலித்தாயை இணங்கவைத்து அவளுடைய குழந்தையை எடுத்து வந்து கொன்றுவிடச் சொன்னான். அது மட்டுமல்லாமல் அதன் மாம்சத்தைச் சமைக்கச் சொன்னான்.

அகம்பனன் அவன் கூறியதுபோல குழந்தையைக் கொண்டுவந்தான். அதை ஹுண்டனின் மனைவியிடம் தந்தான். கணவனின் கூரமான கட்டளையைக் கண்டு பயந்து அந்தக் குழந்தையை தன் பணிப்பெண் மேகலாவிடம் தந்து எங்கேனும் அதை விட்டுவிடச் சொன்னாள். அவளும் அதை சற்றுத் தொலைவில் இருந்த வசிஷ்டரின் ஆஸ்ரமத்தில் விட்டுவிட்டாள். ஹுண்டனின் மனைவியும் ஒரு காட்டு எருமையின் மாம்சத்தைச் சமைத்து ஹுண்டனுக்குப் பறிமாறினாள். வசிஷ்டாஸ்ரமத்தில் விடப்பட்ட குழந்தையை அவன் ஹுண்டனை சம்ஹாரம் செய்யப்போகிறான் என்றுணர்ந்த அவர்

அவனை க்ஷத்ரிய தர்மப்படி வளர்த்து வந்தார். அவனுக்கு நஹுஷன் என்று பெயரிட்டார். தங்கள் குழந்தைக் காணமல் போனது கண்டு மிகவும் துயரத்தில் இருந்த ஆயு இந்துமதி தமப்தியினருக்கு நாரத முனிவர் உண்மையைச் சொல்ல சமாதானமாயினர்.

ஆயுவின் புத்ரனனின் ஆயுளை முடித்துவிட்டதாக எண்ணி ஹுண்டன் ஒரு நாள் அசோக சுந்தரியிடம் சென்று அவனை மணம் முடிக்க வேண்டினான். ஆயுவின் புத்ரனை தான் கொன்றுவிட்டதாகவும் சொல்லி நிர்பந்தப்படுத்தினான். அவள் தளரவில்லை. மீண்டும் அவன் வந்தால் தன் தபோ பலத்தால் பஸ்மம் ஆக்கிவிடுவேன் என்று கூறி அவனை வெருடினாள். அவளுக்கும் நஹுஷன் இருக்கிறானா என்று ஐயம் எழுந்தது. ஒரு நாள் வித்வரா என்னும் கின்னரன் அவளிடம் நஹுஷன் இருப்பிடத்தைக் கூறி ஐயத்தைத் தீர்த்துவைத்தான்.

இதன் நடுவில் நஹுஷன் தன் உண்மை நிலையை அறியாமல் வசிஷ்டர் கற்றுக் கொடுத்த வித்தைகளைக் கசடறக் கற்றுக் கொண்டான். ஒரு நாள் காட்டில் ''இவன் தான் நஹுஷன், ஹுண்டனைக் கொன்று அசோகசுந்தரியை மணம் முடிக்கப் போகிறவன்'' என்று அசரீரி சொன்னதைக் கேட்டு வியப்புடன் வசிஷ்டரிடம் கேட்க அவரும் உண்மையைச் சொன்னார். பின்பு காலம் கனிந்தது. அவனுக்கு தேவர்கள் அனைவரும் படைக்கலன்களை உவந்து ஈந்தனர். இந்த்ரனனின் தேரோட்டி மாதவியே அவனுக்கு தேர் ஓட்ட ஹுண்டனுக்கும், நஹுஷனுக்கும் பெரும் போர் நிகழ இறுதியில் நஹுஷன் வென்றான். இதுதான் விதியின் கை வரிசை என்றுபௌராணிகர் ஓய்ந்தார்.

(பத்ம புராணம்)

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலமட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
டாக்டர் வே. ராகவன் தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம்.
மொழி பெயர்ப்பாளர் ஜயவிஜயா

## ஸ்ரீ க்ருஷ்ணனின் தூத வாக்யம்



க்ருஷ்ணர்
கௌரவர்களின்
அரசனே வீரர்களின்
உயிர்ச் சேதமில்லாமல்
கௌரவர்களுக்கும்
பாண்டவர்களுக்கும்
இடையே
சமாதானத்தை யாசிக்க
வந்துள்ளேன்.
துர்யோதனன்
தலைமையின் கீழ்
இருக்கும் உன்
புத்ரர்கள் தர்மத்தைப்
புறம் தள்ளி
துஷ்டர்களாய் நடக்கின்றனர்.

இப்போது கௌரவர்களுக்கு பெரும் இடர் வந்துள்ளது. இது புறக்கணிக்கப்பட்டால் லோகத்தை நாசம் செய்யும். நீங்கள் நினைத்தால் இதை தவிர்க்க முடியும். இப்போதும் கூட ஸமாதானம் செய்ய முடியாத ஒன்று அல்ல. இந்தச் சமா தானம் உன்னையும் என்னையும் அண்டியுள்ளது. நீ உன் புத்ரர்களை வழிக்குக் கொண்டுவா நான் பாண்டவர்களை வழிக்குக் கொண்டு வருவேன். பாண்டவர்களுக்குச் சேர வேண்டிய பித்ரார்ஜிதமான ராஜ்யத்தைத் தந்துவிட்டு நீ உன்புத்ரர்களுடன் இந்த ராஜ்யத்தை அனுபவி.

நான் உன் புத்ரர்கள் பாண்டவர்கள் இருவரின் நலனையும் நாடுபவன். பொறாமையிலிருந்து உன் புத்ரர்களை விலக்கி வை. பாண்டவர்கள் சமாதானத்துக்கும் யுத்தத்திற்கும் சித்தமாயுள்ளனர். எனவே எது நல்லதோ அதை விரும்புவாயாக.

க்ருஷ்ணரின் இந்த வார்த்தையை எல்லோரும் ஏற்றனர். ஆனால் யாரும் எதுவும் கூறவில்லை. த்ருதராஷ்டிரன் க்ருஷ்ணா இம்மைக்கும் மறுமைக்கும் தர்மாதர்மங்கள் அடங்கிய வாக்யத்தை கூறினாய். இதை தீர்மானம் செய்வதில் நான் என் வசத்தில் இல்லை. எது நடக்கப் போகிறதோ அதுவும் என் வசத்தில் இல்லை. அதர்மத்தில் திளைத்திருக்கும் என் மகன் துர்யோதனனை வழிக்கு கொண்டு வா. இதை நீ செய்தால் பெரும் கார்யம் செய்ததாய் ஆகும்.

அரசனனின் வார்த்தையைக் கேட்ட புருஷார்த்தங்களை அறிந்த க்ருஷ்ணர் துர்யோதனன் பக்கம் திரும்பி அறம் பொருள் நிரம்பிய வார்த்தையை சொல்லலானார்.

**க்ருஷ்ணர்** : *துர்யோதனனே சமாதானப் பேச்சை நீயும் உன் கூடப் பிறந்தவர்களும் கேட்க வேண்டும். பாண்டவர்களோடு சமாதான உடன்படிக்கையை உன் தந்தை ஏற்கிறார். நீயும் உன்னோடு சேர்ந்தவர்களும் அதை ஆதரிக்க வேண்டும். மகா பலசாலிகளான பாண்டவர்கள் உன்னை யுவராஜனாக பட்டம் சூட்டுவர். உன் பிதா எல்லோருக்கும் மகா ராஜாவாக விளங்குவர். துர்யோதனா உன் பக்கம் இப்போது வரும் இந்த அதிர்ஷ்டத்தைப் புறம் தள்ளாதே. பாண்டவர்களுக்குப் பாதி ராஜ்யம் தந்து சிறப்புடன் இரு. பாண்டவர்களுடன் நிலைத்த சமாதானத்தைச் செய்துகொள், நெடுங்காலம் வாழ்வாயாக.*

**பீஷ்மர்** : *க்ருஷ்ணன் உனக்கும் உன் பரிவாரத்திற்கும் நல்லதைச் சொன்னார். ஏற்றுக் கொள். இதை ஏற்காவிடில் உனக்கு நற்கதி இல்லை. உன் பெற்றோரை துயரக்கடலில் தள்ளாதே.*

**த்ரோணர்** : *துர்யோதனனே பீஷ்மர், க்ருஷ்ணர் இவர்களுடைய உப்தேசத்தைக் கேட்க மறுத்தாயானால் பின்பு வருந்த நேரிடும்.*

**விதுரர்** : *துர்யோதனா உனக்காக நான் வறுந்தவில்லை உன் பெற்றோருக்காக வருந்துகிறேன். குல நாசகனான உன்னைப் பெற்றதன் மூலம் அவர்கள் இருவரும் பிச்சைக்காரர்கள் போல் இவ்வுலகில் திரிவர்.*

**த்ருதராஷ்டிரன்** *துர்யோதனா க்ருஷ்ணரின் சமாதானப் பேச்சை நீ கேட்கவில்லையெனில் உனக்குத் தோல்வி நிச்சயம்.*

*(தொடரும்)*

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ

## 213. கேள்வி : மனிதன் எதையெல்லாம் செய்யலாம்? எதையெல்லாம் செய்யக் கூடாது ?




**பதில் :** 1. பலருடன் விரோதித்துக் கொள்ளக் கூடாது.

2. தனக்குப் ப்ரதிகூலமானதைப் பிறறுக்குச் செய்யக் கூடாது.

3. தன்னைப் புகழ்ந்து கொள்ளக் கூடாது.

4. பிறரை இகழக் கூடாது.

5. பிறர் நிந்தித்தாலும் மௌனமாய் இருந்து விட வேண்டும்

6. பிறர் ரகஸ்யங்களை அறிந்திருந்தாலும் மற்றவர்களுடன் அவை பற்றிப் பேசக் கூடாது.

7. பாபியானாலும் ஒருவனை பாபி என்று சொல்லக் கூடாது.

8. வஸ்த்ரமில்லாத ஸ்த்ரீயையும், கோபத்தில் இருக்கும் குருவின் முகத்தையும் பார்க்கக் கூடாது.

9 . எண்ணை, ஜலம் இவற்றில் தன் நிழலைப் பார்க்கக் கூடாது.

10. கிணறு குழி இவைகளைத் தாண்டக் கூடாது.

11. கைகளாலோ, கால்களாலோ ஜலத்தை அடிக்கக் கூடாது.

12. அமரும் ஆஸனத்தைக் காலால் இழுக்கக் கூடாது.

13. பற்களால் நகங்களைக் கடிக்கக் கூடாது.

14. தூங்குகின்றவனை எழுப்பக் கூடாது.

15. இளம் வெயிலைச் சேவிக்கக் கூடாது.

16. காரணமில்லாமல் துப்பக் கூடாது.

17. பாதரக்ஷை இல்லாமல் வெளியில் செல்லக் கூடாது.

18. காலால் காலைத் தேய்க்கக் கூடாது.

19. அக்னியில் காலைக் காய்ச்சக் கூடாது.

20. தேவ பிம்பம், ப்ராம்மணன், குரு, சூர்யன், பசு, ஜலம், அக்னி, சந்த்ரன், இவர்கள் முன் காலை நீட்டக் கூடாது.

21. அசுத்தனாய் அக்னியில் ஹோமம் செய்யக் கூடாது.

22. அதிக ஆழமுள்ள ஜலத்தில் மூழ்கக் கூடாது.

23. ஜலத்தில் மூத்ரம், எச்சை இவைகளை விடக்கூடாது.

24. சரணடைந்தவரை கை விடக் கூடாது.

25. அடையாளத்திற்காக உள்ள மரத்தை வெட்டக் கூடாது.

26. அக்னியைத் தாண்டக் கூடாது.

27. முன் ஒப்புக் கொண்ட உடன் படிக்கையை மீறக் கூடாது.

28. காலையிலும் மாலையிலும் பிச்சைக்குப் பயந்து வீட்டின் வாயிலைமூடக் கூடாது.

29. ஜலத்தில் வெகு காலம் இருக்கக் கூடாது.

30. அக்னியை விசிறக் கூடாது.

31. அக்னி, ப்ராம்மணன், பசுக்கள் இவர்களின் நடுவில் போகக் கூடாது.

32. வாயை மூடாமல் கொட்டாவி விடக் கூடாது.

33. அதிகமான சப்தத்துடன் சிரிக்ககூடாது.

34. மீசையைக் கடிக்கக்கூடாது.

35. மரத்தின் நுனியில் ஏறக் கூடாது.

36. நித்ய கர்மாக்களுக்கு விரோதம் இல்லாத காலத்தில் ஜபிக்கலாம்.

# வேதோ நித்யம் அதீயதாம்

## உபநயனமான அந்தண மாணவர்களுக்கு முக்கிய அறிவிப்பு

"ஜந்தூனாம் நரஜன்ம துர்லபம்
அத: பும்ஸ்த்வம் ததோ விப்ரதா"

என்று ஸ்ரீ சங்கர பகவத்பாதர் தன்னுடைய விவேக சூடாமணி என்னும் நூலில் குறிப்பிடுகின்றார். "அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்று ஔவையாரும் இதே கருத்தை கூறுகிறார். அந்தண குலத்தில் பிறந்த அனைவரும் வேதாத்யயனம் செய்ய வேண்டும் என்பது நியதி. இந்த நியதியை பல சிரமங்கள் வந்த பொழுதும் நமது முன்னோர்கள் கடைபிடித்து வந்துள்ளனர். ஆனால் தற்பொழுது உள்ள சமுதாய சூழ்நிலைகளால் இந்த அவிச்சின்னமான வேத பரம்பரையில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதை சரிசெய்து மீண்டும் இந்த வேத பரம்பரையானது தழைத்தோங்க வேண்டும் என்பதற்காகத்தான் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் பல ஊர்களில் பல வேத பாடசாலைகள் ஸ்தாபித்து நடத்தி வருகின்றார்கள்.

தற்போதைய சூழ்நிலையில் பள்ளி படிப்பும் மிக முக்கியமான ஒன்றாக மாறிவிட்டதால் வேதாத்யயனம் செய்து கொண்டே பள்ளியிலும் படித்து தேர்ச்சி பெறுவதற்கான வாய்ப்பும் ஸ்ரீ சங்கர மடம் மூலம் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் தற்பொழுது காஞ்சிபுரத்தில் உள்ள ஸ்ரீ தண்டபாணி ஓரியண்டல் பள்ளியில் பள்ளி படிப்பும், அதோடு சேர்ந்து வேதம், சம்ஸ்க்ருதம், மற்றும் நமது சம்ப்ரதாய பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் தமிழ்மொழியில் உள்ள பக்தி இலக்கியங்களும், நீதி நூற்களும் கற்பிக்கப்படும்.

இதன் சிறப்பம்சம் என்னவென்றால் இத்திட்டத்தில் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் இரு வழிகளிலும் பயிற்சி தரப்படும். கல்வி, உணவு, தங்குமிடம் எதற்கும் கட்டணம் கிடையாது. 10 வயது முதல் 13 வயது வரையுள்ள உபநயனமான மாணவர்கள் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கலாம். பள்ளி படிப்பு முடிந்ததும் கல்லூரி படிப்புக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

பெற்றோர்கள் இந்த பொன்னான வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு தங்கள் குழந்தைகளுக்கும் நமது சமுதாயத்திற்கும் வளமான எதிர்காலம் அமைய ஒத்துழைப்பு அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள்

**R.வெங்கடசுப்ரமண்யன் :8903015221**
**V.P.ஸ்ரீனிவாசன் : 9445104873**
**G.பிரசாந்த் : 8056375421**
**K.ஸ்ரீராம் : 9894775434**